பக்கங்கள்: 16
விலை: 20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை 16.06.2019 | கதிர் 223

## இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவைக் கலைக்கும் அதிரடி உத்தரவு ஒன்றை நேற்று முன்தினம் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வழங்கியிருக்கின்றார்.

கடந்த 31ஆம் திகதியுடன் பொதுச் சேவை ஆணைக் பக்கம் 02 »

## ஹிஸ்புல்லாவிடம் நேற்று 8 மணி நேரம் விசாரணை



கொழும்பு, ஜுன் 16

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, பயங்கரவாத விசாரணைப் பக்கம் 15 »

# மைத்திரி – ரணில் இடையே சஜித் சமரசத்துக்கு முயற்சி!

கொழும்பு, ஜுன் 16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் அமைச்சர் சஜித் பிரேமதாச ஈடுபட்டு வருகிறார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

இந்தச் சமரச முயற்சியின் ஒரு கட்டமாகவே அமைச்சரவை சர்ச்சை தொடர்பில் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்துள்ளார். பக்கம் 15 »

### சரவணபவன் எம்.பி. திடீர் காட்டம்

# தமிழரின் பிரச்சினையை தட்டிக் கழிப்பவரே மோடி



### இன்னும் இரண்டு தடவைகள் கூட அவர் பிரதமரானாலும் அதுதான் நிலைமையாம்

யாழ்ப்பாணம், ஜுன் 16

“இரண்டாவது முறையாகப் பிரதமராக வந்திருக்கின்றார் நரேந்திர மோடி. அவர் பிரதமராக மூன்றாவது முறை வந்தாலென்ன, நான்காவது முறை வந்தாலென்ன எங்கள் இனப்பிரச்சினை விவகாரத்தைத் தட்டிக் கழித்துக் கொண்டுதான் போவார்.”

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மீது கடும் அவநம்பிக்கை தெரிவித்துத் திடீரெனக் காட்டமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். பக்கம் 15 »

## கோட்டாவா வேட்பாளர்? இன்னமும் முடிவில்லை!

### கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜுன் 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் பக்கம் 15 »

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுடன் ஐ.எஸ். நேரடித் தொடர்பு கிடையாது

கொழும்பு, ஜுன் 16

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று நாட்டில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில், ஐ.எஸ். அமைப்பு நேரடியாகத் தொடர்பு பக்கம் 15 »

## இலங்கையில் பௌத்தத்தை அழிப்பதற்கே அரசு முயற்சி!

### சாடுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஜுன் 16

ஆட்சிக்கு வந்த இந்த 4 வருடங்களில், இலங்கையிலிருந்து பௌத்தத்தை அழிக்கும் செயற்பாட்டையே அரசு மேற்கொண்டுள்ளது என பக்கம் 15 »

## வவுனியாவில் சபாநாயகர்



வவுனியா, ஜுன் 16

வவுனியா ஈரட்டை பெரியகுளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ நினைவு நூலகம் மற்றும் மஹா கருணா பள்ளியை நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பக்கம் 15 »

## உங்கள் காலைக்கதிர் அதிகாலையே இலவசமாக இனி உங்களைத் தேடி வரும்

அன்பு வாசகர்களே!

மாறி வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி உங்கள் ‘காலைக்கதிர்’ நாளிதழை தினசரி அதிகாலையில் உங்கள் ‘ஸ்மாட் போன்’ வாயிலாக உங்கள் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்யும் ஏற்பாட்டைச் செய்து வருகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்களின் மின்னஞ்சல் முகவரி, ‘வாட்ஸ் அப்’, ‘வைபர்’, முகப்புத்தகம் அல்லது அது போன்ற சமூக வலைத்தள தொடர்பில் ஏதேனும் ஒன்றின் விவரத்தை கீழ்வரும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உதவுங்கள்.

அந்த முகவரிக்கு தினசரி விடிகாலையில் எமது பத்திரிகை தவறாது கிட்டும்.

வடக்கிலும், கிழக்கிலும், இலங்கை முழுவதிலும், புலம்பெயர் தேசங்களிலும் இருக்கும் எமது பல்லாயிரம் வாசகர்களுக்கும் இலவசமாக விடிகாலையில் எமது பத்திரிகையைத் தவறாது கிடைக்கச் செய்யும் இத்திட்டம் மூலம் ‘காலைக்கதிர்’ தனது அனைத்து வாசகர்களையும் ஒன்றிணைக்கும் என நம்புகிறோம்.

உங்கள் தொடர்பு முகவரியை நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் விலாசம்

kalaikkathirpaper@gmail.com

தொலைபேசி இல. - 021 222 3000

**நிர்வாகம்.**

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேடுவத் தலைவருக்கும் அழைப்பு

கொழும்பு, ஜுன் 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வருமாறு தமக்கும் அழைப்புக்கள் வருகின்றன என வேடுவர்கள் தலைவர் வன்னியலஅத்தோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் தமது 72 ஆவது பிறந்த நாளையொட்டி தம்பானை வேடுவ கிராமத்தில் பக்கம் 15 »

## அடுத்த இராணுவத் தளபதி பதவி சவேந்திர சில்வாவுக்குக் கிட்டுமா?



கொழும்பு, ஜுன் 16

அடுத்த இராணுவத் தளபதி தொடர்பில் இராணுவத்துக்குள் கடும் பனிப்போர் நிலவி வருவதாகக் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பக்கம் 15 »

## கோட்டா வேட்பாளர் என்றால் ஐ.தே.கவின் வெற்றி உறுதியாம்

### அடித்துக் கூறுகின்றார் மங்கள



கொழும்பு, ஜுன் 16

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கி பக்கம் 15 »

## முஸ்லிம் அரசியல்வாதிகள் மீண்டும் பதவியேற்பாரா?

### அடியோடு நிராகரித்தார் ஹாரிஸ் எம்.பி.

கொழும்பு, ஜுன் 16

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏற்கனவே இராஜினாமா செய்த பதவிகளை மீண்டும் பொறுப்பேற்கவுள்ளனர் என வந்த செய்திகளைத் திட்டவட்டமாக நிராகரித்தார் பக்கம் 15 »

# பிரபாகரனுக்கு நிகர் வேறு எவருமில்லை!



## அவரை இஸ்லாமியப் பயங்கரவாதிகளுடன் ஒப்பிடாதீர் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு ரவூப் ஹக்கீம் பதிலடி

கொழும்பு, ஜூன் 16

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நிகர் அவரே ஆவார். இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது. பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது அபத்தமான ஒன்று.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அவரின் இயக்கத்தினருக்கும் எனப் பெரும் ஆதரவுத் தளமிருந்தது. இப்போதும் இருக்கின்றது. அதேவேளை, அவர்களுக்கென்று கட்டமைப்பு இருந்தது. அரசியல் கொள்கை இருந்தது. அவர்களுக்கென்று ஒரு விடுதலைப் போராட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கிளிநொச்சியில் நாம் நேரில் சந்தித்தோம். அவர் எனக்கும் எனது கட்சியினருக்கும் அமோக வரவேற்பு வழங்கியிருந்தார். சுமார் ஐந்து மணித்தியாலங்கள் எங்களுடன் அவர் மனம் விட்டுப் பேசினார்.

துரதிஷ்டவசமாக அந்தச் சமாதானக் காலம் நீடிக்கவில்லை. மீண்டும் போர் ஆரம்பமானது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் குறுகிய நோக்கத்தில் இருந்ததில்லை. உரிமைகளைக் கேட்டு நிற்கும் தமிழ் மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர்களின் தாக்குதல்கள் இருந்தன.

பிரபாகரனுக்கு நிகர் அவரே ஆவார். இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது. இந்தநிலையில், பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது அபத்தமான ஒன்று.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய கும்பலுக்கென்று எதுவுமே கிடையாது. இவர்களுக்கு முஸ்லிம் சமூகத்திடமிருந்து எந்த ஆதரவும் கிடையாது. அப்படியான கும்பல் பிரபாகரன் என்கிற அந்தஸ்துக்கு வந்து விடுவார்கள் என்று அச்சப்படுகின்ற அதீதமான அச்சப்போக்கு அபத்தமானது – என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)



கிராம எழுச்சித் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதியில் உடுத்துறை முத்தெட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் நினைவுக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் திறந்துவைப்பதையும், அருகில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு ஆளுநர் கேட்டிருந்தார் என்றும் –

எனினும், உறுப்பினர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை வழங்காமையால், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு மறுசீரமைக்கப்படுவதற்காக அது இப்போது வெற்றிடமாக்கபட்டிருக்கின்றது என்ற அறிவித்தலை அதன் இதுவரை நாளான உறுப்பினர்களுக்கு ஆளுநர் நேற்று முன்தினம் அனுப்பி வைத்தார் என்றும் – அறியவந்தது.

யாழ். முன்னாள் அரச அதிபர் சி.பத்மநாதனைத் தலைவராகக் கொண்டு ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு 2017 ஒகஸ்டில் அப்போதைய ஆளுநர் ரெஜினோல்ட் குரேயால் நியமிக்கப்பட்டிருந்தது.

வடமாகாண பொதுச்சேவையை புத்துயிர் பெறச் செய்யும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவைக் கலைத்துள்ளதாக ஆளுநர் கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகின.

ஆனால், உண்மையில், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் மக்களுக்கு அரச நியமனங்களை வழங்குவதில் தாராளப் போக்கைக் கடைப்பிடிக்காமல், சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை அளவுக்குமீறி கெடுபிடியாகப் பின்பற்றி பலரின் அரச நியமனங்களுக்கு வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு முட்டுக்கட்டையாக இருந்தது என்றும் –

அதனால் விசனமடைந்திருந்த ஆளுநர், வடக்கில் அரச நியமனங்கள் வழங்கல் மற்றும் திட்டங்கள் தொடர்பில் மேற்படி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கொண்டிருக்கும் திட்டங்கள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றைத் தரும்படி ஐவரிடமும் கோரியிருந்தார் என்றும் –

திருப்தி தரக்கூடிய அறிக்கை ஏதும் கிடைக்காத பின்னணியில் வேறு வழியின்றி ஆணைக்குழுவின் மறுசீராக்கத்துக்கு ஆளுநர் தள்ளப்பட்டார் என்றும் –

அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

எது, எப்படியோ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நமது மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் கெடுபிடி தவிர்த்து, தாராளப் போக்குப் பின்பற்றப்படுவது அவசியமாகும்.

'தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிற்கின்றமை' போலத்தான் அரசும் அதன் பிரதிநிதியான ஆளுநரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண விடயத்தில் தாராளமாக நடக்க முயன்றாலும், இடையில் உள்ளூர் பூசாரிகள் போன்ற நமது அதிகாரிகள் குறுக்கே நிற்கின்றனர் போலும். அதுதான் எங்கள் சாபக்கேடு.

★★★

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்ட சர்ச்சை இன்னும் முடிவுக்கு வந்தபாடாக இல்லை. ஜவ்வு மிட்டாய் போல அது தொடர்ந்து இழுபடுகின்றது.

வடக்கு அரசியல் தரப்புகள் சிலவற்றின் கடும் ஆட்சேபணையை அடுத்து இவ்விடயத்தில் சர்ச்சை ஏற்பட்டது. வடக்கு ஆளுநர் நேரடியாகத் தலையிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொறுப்பிலிருந்து வைத்தியர் சத்தியமூர்த்தியை ஒதுங்கும்படி கேட்டமையுடன், அப்பதவியில் பதில் அதிகாரியாக வைத்தியர் தேவநேசனைத் தொடரும்படியும் வழிகாட்டல் வழங்கியிருந்தார்.

இப்போது வைத்தியர் சத்தியமூர்த்தி இரண்டு வாரப் பயணமாக வெளிநாடு சென்றுள்ளார்.

இதற்கிடையில் –

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற – சுகாதார சேவை தொடர்பான – உயர்மட்ட மாநாடு ஒன்றில் இவ்விடயம் எதிரொலித்திருக்கின்றது.

வடக்கு ஆளுநரின் வழிகாட்டல் பிரகாரம் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகப் பணிபுரியும் வைத்தியர் தேவநேசனை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளராக உடனடியாக நியமிக்கும்படி, சுகாதார சேவைகளுக்கான பணிப்பாளர் நாயகம் அனில் முனசிங்க அந்த மாநாட்டில் வைத்து உத்தரவிட்டிருக்கின்றார்.

வைத்தியர் சத்தியமூர்த்தி நாடு திரும்பியதும் உடனடியாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொறுப்பை அவரிடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டு வைத்தியர் தேவநேசனை ஊர்காவற்றுறைக்குப் பணிக்குச் செல்லும்படியும் –

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவர் நியமிக்கப்படும் வரை அப்பொறுப்பை வைத்தியர் சத்தியமூர்த்தியே பார்த்துக் கொள்வார் என்றும் –

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்றோரை வைத்துக் கொண்டு இந்த மாநாட்டில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உத்தரவு அறிவிப்பை விடுத்தார் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமன இழுபறி தொடரும் போலத்தான் தோன்றுகின்றது.

இந்த இழுபறியால் வடக்கு சுகாதார சேவைகள் பாதிக்கப்படாமல் இருந்தால் சரி....!

- மின்னல் -

## ஜிகாதி தீவிரவாதம் பொது அச்சுறுத்தல்

### இந்திய தூதுவர் கருத்து



கொழும்பு, ஜூன் 16

ஜிகாதி தீவிரவாதம் அனைவருக்கும் பொதுவான அச்சுறுத்தலாக இருக்கிறது என்று இலங்கைக்கான இந்திய தூதுவர், தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அனைத்துலக யோகா நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

யோகா ஒன்றை எமக்குக் கூறினால், ஜிகாதி தீவிரவாதம் அதற்கு எதிர்மாறானதாகக் கூறுகிறது. இந்த ஜிகாதி கொள்கை, அனைவருக்கும் பொதுவான அச்சுறுத்தலாக உள்ளது.

இந்தப் பிரிவினைவாதக் கருத்தியல்களைக் கொண்ட மக்களின் மனங்களை நாம் தூய்மைப்படுத்தவேண்டும்.

நம்மை ஒன்றிணைக்கும் சக்திகளை நாம் பலப்படுத்தும் நேரம் இது. நாங்கள் ஒன்றுபட்டால், எழுந்து நிற்க முடியும், பிளவுபட்டால், வீழ்ச்சிகாண நேரிடும். என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## தஜிகிஸ்தானில் புடினை சந்தித்து மைத்திரி பேச்சு



டூான்பே, ஜூன் 16

தஜிகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து புடின் கரிசனையுடன் கேட்டுக்கொண்டார் என இலங்கை ஜனாதிபதி தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## இளம் குடும்பத் தலைவர் கத்திக்குத்தினால் மரணம்

### மற்றொருவர் படுகாயம்

அம்பாறை, ஜுன் 16

அம்பாறை - காரைதீவில் நேற்று முன்தினம் மாலை 05:45 மணியளவில் இருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், ஒருவர் பலியானார். காயங்களுக்கு உள்ளான மற்றவர் ஆபத்தான நிலையில் காரைதீவு வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாகவே இந்த கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர் வடிவேல் வீதி காரைதீவு 12ல் வசிக்கும் ஒரு பெண் பிள்ளையின் தந்தையான ஞானசேகரம் ரதாஸ் (வயது - 27) என்பவராவார். உயிர் இழந்த நபரின் சடலம் காரைதீவு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# குருநாகல் வைத்தியர் நிரபராதி!

### சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு நடத்திய விசாரணை அறிக்கை விரைவில்

கொழும்பு, ஜுன் 16

குருநாகல் வைத்தியர் ஷாபி தொடர்பில் விசாரிக்கச் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட குழு தனது விசாரணைகளை முடித்துக்கொண்டுள்ளது.

கருக்கலைப்பு மற்றும் மகப்பேற்றைத் தடுக்கும் எந்தச் சிகிச்சைகளையும் அவர் வழங்கியமைக்கான ஆதாரம் எதுவும் இல்லையென்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவரின் சிகிச்சையையடுத்து மகப்பேறு பாதித்துள்ளதாகப் பலபெண்கள் முறைப்பாடு செய்திருந்தாலும் அவர்கள் எவரும் மருத்துவப் பரிசோதனைக்கு முன்வர தயங்குகிறார்கள் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணை அறிக்கை சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது. அதேசமயம் எதிர்வரும் 27 ஆம் திகதி குருநாகல் நீதிமன்றத்தில் டாக்டர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நடைபெறவுள்ளது. (ஐ)

## பதவிகளை மீண்டும் பொறுப்பேற்பது குறித்து முஸ்லிம் தலைமைகள் பேச்சு

கொழும்பு, ஜுன் 16

அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்பது குறித்து ஆராய முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளனர்.

அதற்கமைய அந்தச் சந்திப்பு எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹலீம் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்குமாறு மஹா சங்கத்தினர் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக ஆராயவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறியுள்ளதாகக் குற்றம்சாட்டி முஸ்லிம் தலைவர்கள் 9 பேர் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தனர்.

அதன்படி அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், எம்.எச்.ஏ.ஹலீம், கபீர் ஹாசீம் மற்றும் எச்.எம்.எம். ஹரீஸ், அலிசாஹீர் மௌலானா, பைசல் காசீம், அமீர் அலி ஆகிய இராஜாங்க அமைச்சர்களும் பிரதியமைச்சரான அப்துல்லா மஹ்ரூப்பும் பதவிகளை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாலைதீவு தூதுக்குழு வந்தது





கொழும்பு, ஜுன் 16

மாலைதீவு நாட்டு தூதுக்குழு நேற்று முன் தினம் இலங்கையை வந்தடைந்தது. மாலைதீவு துணை ஜனாதிபதி பைசல் நசீம், சபாநாயகர் மொஹமட் நசீர் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் 100 இற்கும் அதிகமான அலுவலர்கள் இந்தத் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவினர் கொழும்பில் பல தரப்புப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர். (ஐ)

## ஆசிய அபிவிருத்தி வங்கி 5 கோடி டொலர்கள் கடன்

கொழும்பு, ஜுன் 16

குறுகிய, சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் அரசின் திட்டத்துக்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்த 5 கோடி டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

சங்வர்த்தனா வங்கி இந்தக் கடன் ஒப்பந்தத்தை, ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொண்டது.

2018ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் என்ரபிரைஸ் ஸ்ரீலங்கா திட்டத்தை அரசு அறிவித்தது. குறுகிய, சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களை உருவாக்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் இது உருவாக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்திற்காகவே, ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் திறைசேரி அறிவித்துள்ளது. இதற்கான உத்தரவாத ஒப்பந்தத்தில் அரசும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் கையெழுத்திட்டன.

நிதியமைச்சின் செயலாளர் சமரதுங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிட பிரதிநிதி விதோவதி ஆகியோர் கையொப்பமிட்டனர். (ஐ)

## ரூபா 15 இலட்சத்தில் அமைக்கப்பட்ட மலசல கூடத்துடன் பாடசாலைக் காணியை ஆக்கிரமித்துள்ள அரசியல்வாதி



கிளிநொச்சி, ஜுன் 16

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் காணியைச் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஆக்கிரமித்துள்ளார். அனைத்து அதிகாரத் தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுசென்றும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் காணியை ஆக்கிரமித்து வெதுப்பகம் ஒன்றை நடத்தி வருகின்றார். அந்தக் காணியை மீட்டு பாடசாலைக்கு வழங்குமாறு பாடசாலை நிர்வாகம் மற்றும் சமூகத்தினர் அரசியல் தரப்பினர்கள், அதிகாரிகள் என பலருக்கும் எழுத்து மூலம் அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மலசல கூடத்தைக் கூட மாணவர்களால் பயன்படுத்த முடியாத நிலையில் அமைக்கப்பட்ட காலம் முதல் ஓரிரு வருடங்களாக இழுத்து மூடப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய பிள்ளைகள் மிகவும் சிரமப்படுகின்றனர் என பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

இந்தக் காணியில் பிரதே சபை உறுப்பினர் உட்பட மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் ஐந்து பேர் வரை ஆக்கிரமித்து குடியிருந்தபோது அவர்களுக்கு மாற்றுக் காணிகள் இரணைமடு பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முன்பாக ஏ - 9 பிரதான வீதிக்கருக்கில் பெறுமதியான இடத்தில் வழங்கப்பட்டன. இதன்போது நான்கு குடியிருப்பாளர்கள் பாடசாலைக் காணியை விட்டு அங்கு சென்று வீட்டுத் திட்டங்களையும் பெற்று வாழ்ந்து வரும் நிலையில் பிரதேச சபை உறுப்பினர் மாத்திரம் பாடசாலை காணியைத் தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளார்.

பாடசாலை நிர்வாகம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர், அரச அதிபர், பிரதேச செயலாளர், கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட பலருக்கு பத்துக்கு மேற்பட்ட கடிதங்களை எழுதியும் அவர்கள் எவரும் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

காணியை ஆக்கிரமித்துள்ள கரைச்சி பிரதேச சபை உறுப்பினரின் செயற்பாட்டால் பாடசாலைச் செயற்பாடுகளுக்கும், மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்கும் பெரும் நெருக்கடி இருப்பதோடு, அதிகளவு மாணவர்களைக் கொண்டு கிளிநொச்சி ஆரம்ப பாடசாலையாகக் காணப்படுகின்ற இந்தப் பாடசாலையை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள், அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகள் இனியாவது கவனத்தில் எடுத்து நடவடிக்கைகளை எடுத்து பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000,

மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com

இணையம் – https://kalaikathir.online

## குரங்கின் கைப் பூமாலை

மிகுந்த எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் தமிழர்களும் சேர்ந்து ஆட்சிக் கட்டுக்குக் கொண்டு வந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழர்களுக்கு நீதியான ஒரு தீர்வைத் தமது இந்த ஆட்சிக் காலத்தில் தரப்போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதியான விடயமாகி விட்டது.

கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேல் நீதியான –கௌரவமான – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – தீர்வு ஒன்றுக்காகப் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் திரும்பவும் ஒரு தடவை ஏமாற்றப்பட்ட சரித்திரத்தைச் சந்தித்து நிற்கின்றார்கள்.

அதீத எதிர்பார்ப்போடு இந்த ஜனாதிபதி மீதும், பிரதமர் மீதும் அளவிற்கதிகமான நம்பிக்கை வைத்து காரியங்களை நகர்த்திய தமிழர்களின் தலைமைகள் – குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இந்த விடயத்தில்தான் முழுமையாக ஏமாற்றப்பட்டிருக்கின்றமையை உணருகின்றமையோடு, தாம் வழி நடத்திய மக்களுக்கு என்ன பதில் – அல்லது விளக்கம் – கூறுவது எனத் தெரியாமல் அந்தரித்து நிற்கின்றமை கண்கூடு.

இந்தச் சமயத்தில்தான் இந்த விவகாரத்தை இனிமேலும் கையாள்வதில் இன்னும் சாணக்கியமாகவும் தந்திரமாகவும் இருக்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் அத்தலைமைகளுக்கு வந்துள்ளது.

ஆனால், அத் தலைமைகள் அதனைப் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை என்பதுதான் பெரும் துரதிஷ்டமாகும்.

ஜனாதிபதியோ, பிரதமரோ, எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது அவர்களின் கட்சியினரோ தமிழருக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தரும் நோக்கத்திலோ, எண்ணத்திலோ இல்லை. அவர்களைப் பொறுத்தவரை நாடாளுமன்ற அரசியலில் தங்களின் செயற்பாட்டுக்கு இன்றைய நிலையில் தமிழ் எம்.பிக்களின் ஆதரவு தேவை. அதை மட்டுமே இலக்கு வைத்து அவர்கள் காய் நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்படி தமிழர்களின் ஜனநாயக பலமும் பந்தாடப்பட்டுக் கொண்டிருக்கையில் கொஞ்சம் அதீத அவதானமாக நமது தலைவர்கள் இருக்க வேண்டியமை கட்டாயம் அல்லவா?

இலங்கை ஆட்சித் தரப்புக்களினாலும், ஆட்சிக்கு வரக் கூடிய மாற்றுத் தரப்புக்களினாலும் ஏமாற்றப்பட்டு, கையறு நிலையில் நிற்கும் தமிழர்கள், தங்களிடம் எச்சசொச்சமாக மிஞ்சியிருக்கும் ஜனநாயகப் பலமும் செல்வாக்கற்று பொலிவிழந்து நிற்கையில், மாற்று வலு பற்றிச் சிந்திப்பது முக்கியமல்லவா?

இன்றைய நிலையில் அப்படித் தமிழர்கள் சிந்திக்கக் கூடிய – நாடக் கூடிய – ஒரே மாற்று வலு சர்வதேச ஆதரவுதான். அது ஒன்று மட்டும்தான்.

கிடைத்த தோண்டியையும் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்த நந்தவனத்து ஆண்டி போல, சர்வதேச ஆதரவுப் பின்பலத்தையும் தமிழ்த் தலைமை 'குரங்கின் கையில் சிக்கிய பூமாலை மாதிரி' சின்னாபின்னமாக்கி சிரிப்புக்கிடமாகி நிற்கின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நடந்து முடிந்த பாரதப் பொதுத்தேர்தலை அடுத்து, இந்தப் பிராந்தியத்தில் அசைக்க முடியாத பெரும் சக்தியாக – வலிமையான தலைவராக – எழுச்சி பெற்றிருக்கின்றார்.

நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் – வரவேற்றாலும், வரவேற்காவிட்டாலும் – அதுதான் உண்மை, யதார்த்தம், நிஜம் எல்லாம்.

உள் நாட்டில் அரசியல் வலிமையையும் தொலைத்துக் கையறு நிலையில் நிற்கும் இலங்கைத் தமிழினத்துக்கு –சர்வதேச ஆதரவுப் பின்புலத்தை மட்டுமே நம்பியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு – இந்திய அரசினதும், பிரதமர் நரேந்திர மோடியினதும் குறைந்த பட்சம் தார்மீக ஆதரவாவது இன்றைய நிலையில் மிக மிக முக்கியமாகும்.

இலங்கைக்கு வந்த பிரதமர் மோடி, தமது நான்கு மணி நேர அரச முறைப் பயணத்துக்கு இடையே தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியமையுடன், தொடர்ந்து விரிவாகப் பேசப் புதுடில்லிக்கு வாருங்கள் என்று அழைப்பும் விடுத்துள்ளமை மிக மிக முக்கிய சந்தர்ப்பமாகும்.

தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு நின்று, இந்த விடயத்தை ஐக்கியமாக அணுகி, வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்காக ஒன்று கூடி, ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயார் செய்து கொண்டு அவர்கள் புதுடில்லி செல்ல வேண்டும்.

அப்படித் தமிழர் தரப்பின் பொது நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்து புதுடில்லிக்கு முன்வைக்கும் முனைப்போ, ஆர்வமோ தமிழர் தலைமைகள் மட்டத்திலிருந்து பிரதிபலிக்கப்படவில்லை.

மாறாக, மோடியை மோசமாக விமர்சிப்பதன் மூலம் கிடைத்த வாய்ப்பைக் குப்பையில் தூக்கி எறியும் பொறுப்பற்ற அரசியலே இங்கு நடக்கின்றது.

என்ன சொல்வது...! கிடைத்த பூமாலை குரங்குகளின் கைகளில் சிக்கி விட்டதே என்று தங்கள் அரசியல் தலைவர்கள் குறித்து மனம் வருந்துவதைத் தவிர, தமிழர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

# தமிழர் கலைப் படைப்பாளிகளுக்கான அரச விருது விழா எதிர்வரும் ஓகஸ்டில்

## தமிழ்க் கலைஞர்களை விண்ணப்பிக்குமாறு கோருகிறார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 16

தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் - கலைஞர்களுக்கான அரச விருது விழா - 2019, என்ற தலைப்பில் இந்நாட்டு தமிழ் கலைஞர்களுக்கு விருதுகளையும்,மறுக்கப்படும் அங்கீகாரத்தையும், பணப்பரிசில்களையும் பெற்றுத்தந்து பாரம்பரிய மற்றும் நவீன தமிழ் கலைகளை ஊக்குவிக்கும் அரச விருது விழாவை நடத்துவிக்க தனது அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும், இந்த விருது விழாவில் விருதுகளைப் பெற நாடெங்கும் கலைப்பணியாற்றும் தமிழ் கலைஞர்கள் விண்ணப்பிக்கவேண்டும் எனவும் ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும்,கொழும்பு மாவட்ட எம்.பியும், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள்,சமூக மேம்பாடு,இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் கூறியுள்ளவை வருமாறு: -

வருடாந்த ரீதியாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள இந்த தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைஞர்களுக்கான அரச விருது விழாவின், இவ்வாண்டுக்கான விருது விழா ஓகஸ்ட் 24 ஆம் திகதி கொழும்பில் கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நாட்டு தமிழ் கலைஞர்களுக்கு விருதுகளையும், மறுக்கப்படும் அங்கீகாரத்தையும், பணப்பரிசில்களையும் பெற்றுத் தந்து, பாரம்பரிய மற்றும் நவீன கலைகளை ஊக்குவிக்கும் வருடாந்த அரசவிருது விழாவை நடத்த எனது அமைச்சு அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை நான் வழங்கியுள்ளேன். இவ்விழாவை நடத்தும் பொறுப்புகளை தேசிய ஒருமைப்பாடு,அரசகருமமொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சின் இந்து சமய கலாசார திணைக்களத்துக்கு வழங்கியுள்ளேன்.

எழுத்து,பாடல்,வாத்தியம், நாட்டியம், அறிவிப்பு, நெறியாள்கை, புகைப்படம், சினிமா, கிராமியக்கலைகள், சிற்பம், நுண்கலைகள் ஆகிய மற்றும் இங்கே சொல்லப்படாத அனைத்து கலைத்துறைகளையும் சார்ந்த,18 வயதிற்கு குறையாத அனைத்து மூத்த, நடுத்தர, இளம்தமிழ்கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளுக்குவயதுஉச்சவரம்பு கிடையாது.

இந்த விழாவிற்கான விண்ணப்பங்களை, கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள்,சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சு தலைமையகம்,கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இந்து சமய கலாசார திணைக்களம்,பிராந்திய அலுவலகங்கள்,மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் www.hindudept.gov.lk எனும் தளத்திலும், சமூக ஊடகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப இறுதி திகதி: 20-07-2019. விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய விலாசம்: பணிப்பாளர்,இந்து சமய கலாசார திணைக்களம், 248 - 1/1காலி வீதி, கொழும்பு.04 (ஐ)

## படையினரின் குடும்பங்கள் புத்தகயாவுக்கு!



கொழும்பு, ஜூன் 16

இலங்கை ஆயுதப் படையின் 160 வீரர்கள், அவர்களது குடும்பங்களின் புத்தகயாவுக்கான விசேட யாத்திரைக்கான பயணம், நேற்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில், நடைபெறவுள்ளது.

இரண்டாவது தடவையாக இடம்பெறும் இந்த யாத்திரையை, இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது. இரு நாடுகளினதும் ஆயுதப் படை வீரர்களுக்கிடையில் இடைத்தொடர்பு, நட்பு என்பவற்றை அதிகரிக்கும் நோக்கில் இரு நாடுகளுக்குமிடையிலான கலந்துரையாடலின் அடிப்படையில், இந்த விசேட யாத்திரை ஏற்பாடு கடந்த வருடம் ஆரம்பமாகியது.

இந்த வருட யாத்திரை, கடந்த ஆண்டை விட, இரண்டிலிருந்து நான்கு என அதிகரித்த நாள்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவிலிருந்து 160 ஆயுதப் படையினர், அவர்களது குடும்பங்கள், இலங்கைக்கு பரஸ்பரம் விஜயம் செய்தல் என்பதையும் உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

யாத்திரையின்போது, இலங்கை ஆயுதப் படை வீரர்கள், அவர்களது குடும்பங்கள், புனித மகாபோதி ஆலயம், 80 அடி உயர புத்தர் சிலை, ராஜ்கிர், நாலந்த அருங்காட்சியகம் என்பவற்றுக்கு விஜயம் செய்வார்கள். இலங்கை இராணுவத் தளபதியின் ஒரு விசேட வேண்டுகோளின்பேரில் இந்தியக் குழுவினர், இலங்கையிலுள்ள முக்கியமான இடங்களுக்கு விஜயம் செய்வார்கள்.

இந்திய ஆயுதப் படையினர், அவர்களது குடும்பங்களின் ஒரு பெரும் குழு ஒரு விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும். (ஐ)

## கினிகத்தேனை விபத்தில் இளைஞன் சாவு

கொழும்பு, ஜூன் 16

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேன பதுபொல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்தார் என கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர் .

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது .

அம்பகமுவ உடபுலத்கம பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்துன் மதுரங்க என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

கொழும்பில் இருந்து ஹற்றன் பகுதியை நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் கினிகத்தேன பகுதியில் இருந்து ரஞ்சிராவ பகுதிக்குச் சென்ற உந்துருளியும் கினிகத்தேன பதுபொல பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது .

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் படுகாயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற சமயம் உயிரிழந்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யபட்டுள்ளார் எனத் தெரிவித்த கினிகத்தேன பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மூளாயில் இன்று விளையாட்டு விழா

வட்டுக்கோட்டை, ஜூன் 16

மூளாய் இந்து இளைஞர் மன்ற வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு, மன்ற முன்றிலில் அதன் தலைவர் த.சசிகரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்திராக வடக்குமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் சிறப்பு விருந்தினராக தந்தை செல்வா நற்பணி மன்றத் தலைவர் லயன் எஸ்.கே. தளையரட்ணமும் கலந்து கொள்வர். (இ)

## நாளை

17.06.2019

திங்கட்கிழமை

நட்சத்திரம்: கேட்டை மு.ப 11.41 வரை

திதி : பூரணை பி.ப 2.49 வரை

பூரணை விரதம்

இராகுகாலம் : 7.23 – 8.53

சுப நேரம் : 11.53 – 1.23

# பிரதமர் ரணிலே முதல் குற்றவாளி!

## சாடுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூன் 16

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குற்றத்துக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்துவதைப் போலவே இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளையும் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த வேண்டுமென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பிணைமுறி ஊழல் குற்றவாளிகளின் பெயரை பட்டியல்படுத்தினால் முதல் பெயராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் குறிப்பிடப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மத்திய வங்கி ஊழல் விடயத்தில் உண்மைகளை வெளிக்கொண்டு வர மக்கள் விடுதலை முன்னணி சகல நடவடிக்கையும் எடுத்தது.

மத்திய வங்கி ஆளுநர், அவரது மருமகன் இருவருமே இதில் தொடர்புபட்டிருந்தனர். இவர்கள் தலையீடு இல்லாமல் விசாரணைகளை முன்னெடுக்க, இவர்கள் பதவிவிலக வேண்டுமென வலியுறுத்தினோம். இது தொடர்பான விசாரணைக்குழு அறிக்கைகளும் உள்ளன. அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றத்தின் முன் கொண்டு வர வேண்டும்.

இதுவரை அவரை நாட்டுக்குக் கொண்டு வந்து நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியவில்லை. பெரும் ஊழலுடன் தொடர்புடைய அரசியல் நெருக்கமே இதற்குக் காரணமாகும். இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அர்ஜுன மகேந்திரன் இலங்கை பிரஜை இல்லை. அவரை நியமிக்க பிரதமரே வலியுறுத்தினார். மத்திய வங்கி ஊழல் குற்றவாளியாக முதல் பெயராக ரணில் பெயர் சேர்க்கப்பட வேண்டும். அவர்தான் இவை அனைத்திற்கும் காரணம் – என்றார். (ஐ)

## விபத்தில் உயிரிழந்த இளைஞனை பெற்றோர் அடையாளம் காட்டினர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த இளைஞரை அவரது பெற்றோர் அடையாளம் காட்டினர்.

கொக்குவில் கிழக்கு சேர்ச் லேனைச் சேர்ந்த தர்மானந்தசிவம் நித்திலன் (வயது –19) என்பவரே உயிரிழந்தார் என்று அவரது தந்தை தர்மானந்தசிவம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாளம் காட்டினார்.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் 19 வயதுடைய இளைஞர் நேற்று முன் தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவர், தகவல் எதனையும் வழங்காமல் அங்கிருந்து சென்றுவிட்டார்.

படுகாயமடைந்த இளைஞர், முழுமையான சுயநினைவற்ற நிலையில் தனது பெயரை மித்திரன் எனத் தெரிவித்துள்ளார். அவர் சத்திர சிகிச்சைக்காக சத்திர சிகிச்சைக் கூடத்துக்குக் கொண்டு சென்றவேளை உயிரிழந்துள்ளார்.

அவரை அடையாளம் காணுமாறு கோரப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவரது பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்து மகனின் சடலத்தை அடையாளம் காட்டினர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன், வேகக் கட்டுப்பாட்டையிழந்து மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினார் என்று இறப்பு விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை தந்தையாரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை-

**மன்னார் பிரதேசத்தில் -**

பெரியபண்டிவிரிச்சான், சின்னப்பண்டி விரிச்சான், மடுத்தேவாலய வெளிப்பிரதேசம், மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## இனந்தெரியாத நபர்களினால் மோட்டார் சைக்கிள் தீக்கிரை



மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

முனைக்காடு மேற்கு பிரதேசத்தில் உள்ள வயல்வெளி பகுதியில் தரித்திருந்த மோட்டார் சைக்கிளே நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இவ்வாறு எரியூட்டப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் யாரென இதுவரை அறியப்படாததோடு, எதற்காக அப்பகுதியில் மோட்டார் சைக்கிள் தரித்து நின்றது என்பது தொடர்பிலும் தகவல்கள் வெளியாகவில்லை.

இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து கொக்கட்டிச்சோலை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுவது அவசியம்

### அஜித் பி.பெரேரா வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 16

நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியம் என டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் இன்னும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே உள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

களுத்துறைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அரசமைப்பினூடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய அளவான நிறைவேற்று அதிகாரங்கள் அவரிடமே உள்ளதென குறிப்பிட்ட அவர், 19 ஆவது அரசமைப்பினூடாகவும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை எனக் கூறினார்.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலும் மாற்றும் கொண்டுவரப்படுவதும் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## பொசன் போயா தினத்துக்காக நாடு முழுக்க விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 16

பொசன் போயா தின கொண்டாட்டங்களை முன்னிட்டு விசேட பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்காக 4227 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அவ்வகையில், அநுராதபுரம் – மிஹிந்தலை பகுதிகளில் 10 சேவை இடங்கள் ஒதுக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அந்தச் சேவைஇடங்களுக்கு பொறுப்பாக உதவி பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2735 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகள் 1096 பேரும், சிவில் உடையில் 246 பேரும் பொலிஸ் உயிர் காப்பு சங்க உத்தியோகத்தர்கள் 150 பேரும் உள்ளடங்கலாக 4227 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், பொலிஸ் தொலைபேசி சேவை, போக்குவரத்து சேவை, மோட்டார் சைக்கிள் பிரிவினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மோப்பநாய் சோதனைகள் என்பனவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் சிவில் அதிகாரிகளும் ஈடுபடவுள்ளனர்.

வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காகப் போக்குவரத்து அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதற்கமைய வாகனங்களை தரித்து வைப்பதற்காக அநுராதபுரத்தில் 20 இடங்களும், மிஹிந்தலையில் 6 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் ஆபத்தான இடங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதுடன், பக்தர்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் வரலாற்று இடங்களுக்கு சேதம் ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஐ)

## முஸ்லிம் தலைமைகள் சமூகம் சார் குறிக்கோளுடனேயே செயற்படுவர்!

### கூறுகின்றார் வியாழேந்திரன் எம்.பி.



மட்டக்களப்பு, ஜூன் 16

முஸ்லிம் தலைமைகள் தேர்தல் காலங்களில் பல்வேறு நோக்கங்களுடன் செயற்பட்டாலும் தேர்தல் முடிந்ததன் பின்னர் தமது சமூகம் சார்ந்த ஒரு குறிக்கோளுடனேயே செயற்படுவார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதம் ஒரு சமூகத்தினை கருவோடு அழிக்கும் செயற்பாட்டைச் செய்துள்ளது. இன்னும் அந்தப் பயங்கரவாதம் முடிவடையவில்லை. அப்பாவி மக்களை நாங்கள் ஒருபோதும் குற்றம் சொல்வதில்லை. யாராகயிருந்தாலும் நீதியாகவும் நியாயமாகவும் செயற்படவேண்டும்.

நாங்கள் மக்களுக்குச் சேவை செய்யும் போது கட்சி பேதங்கள் காட்டத்தேவையில்லை. அரசியலில்தான் அந்தந்த கட்சி சார்ந்து திறமைகளைக் காட்டவேண்டும்.

முஸ்லிம் சமூக அரசியல்வாதிகளில் மூன்று பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் 21பேரும் பதவி விலகியுள்ளனர். தேர்தல் காலங்களில் பல்வேறு நோக்கங்களுடன் செயற்பட்டாலும் தேர்தல் முடிந்ததன் பின்னர் தமது சமூகம் சார்ந்த ஒரு குறிக்கோளுடனேயே அவர்கள் செயற்படுவார்கள்–என்றார்.

காலைக்கதிர் Kalaikathir



# சிங்களவர்களுக்குத் தமிழ் மக்கள் எதிரிகள் முஸ்லிம்கள் துரோகிகள் என்கிறார் விமல்!



– இப்படிக் கூறியுள்ளார் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

கொழும்பு, ஜூன் 16

*பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்தால் சிங்களவர்களுக்குத் தமிழர்கள் எதிரிகளாக இருந்து வருகின்றனர். அதேவேளை, சஹ்ரான் குழுவினரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து சிங்களவர்களுக்கு முஸ்லிம்கள் துரோகிகளாக மாறியுள்ளனர். ஏனெனில், முஸ்லிம்களை சிங்களவர்கள் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால், அது இன்று தலைகீழாக மாறியுள்ளது.*

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: –

இந்த நாட்டில் இஸ்லாமிய தீவிரவாதத்தை உடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனில், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறியமை போல் முஸ்லிம்கள் அனைவரினதும் வீடுகள் மற்றும் பள்ளிவாசல்கள் சோதனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், சஹ்ரான் குழுவினரின் தாக்குதல்களுடன் தொடர்புபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் உடன் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அந்தத் தண்டனை தூக்குத்தண்டனையாக இருக்கவேண்டும் – என்று கூறியுள்ளார். (ஐ)

## மூதாட்டியை வாள் முனையில் மிரட்டி பணம், நகை கொள்ளை

### யாழ். புங்கன்குளத்தில் அதிகாலை சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம், புங்கன்குளம் பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் வாள் முனையில் மூதாட்டியை அச்சுறுத்தி நகைகள், பணம் மற்றும் தொலைபேசிகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அயலவர்கள் கூறுகையில் –

பிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்கின்றனர். இந்நிலையில் மூதாட்டி தனிமையில் வாழ்ந்து வந்தார்.

ஓய்வு பெற்ற அரச ஊழியரான அந்த மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கும்பல் வாளைக் காட்டி அச்சுறுத்தியதுடன், மூதாட்டியின் வாய்க்குள் துணியை அடைந்து பணம், நகை மற்றும் தொலைபேசிகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

கதவுகளை உடைத்தும், கூரையை பிரித்தும் இரு வழிகளால் கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

நேற்றுக் காலையே மூதாட்டி வீட்டில் கொள்ளை நடந்தது தெரியவந்தது.

இதனையடுத்து வாய்க்குள் துணி அடையப்பட்ட நிலையில் மூச்சுவிடச் சிரமப்பட்ட மூதாட்டியை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்ததுடன், சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அயலவர்கள் கூறினர்.

தற்போது பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ – 07)

## புத்தளம் மாவட்டத்தில் கடும் வறட்சி 45 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு



கொழும்பு, ஜூன் 16

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக ஒன்பது பிரதேச செயலகப் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் 13427 குடும்பங்களைச் சேர்ந்த 45773 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 1598 குடும்பங்களைச் சேர்ந்த 5719 பேர்களும் முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 2041 குடும்பங்களைச் சேர்ந்த 7404 பேர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பள்ளம பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 1823 குடும்பங்களைச் சேர்ந்த 6173 பேர்களும் நவகத்தேகம பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 392 பேர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறே வண்ணாத்தவில்லு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 455 குடும்பங்களைச் சேர்ந்த 1572 பேர்களும் மகாவெவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 2164 குடும்பங்களைச் சேர்ந்த 8238 பேர்களும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 1137 குடும்பங்களைச் சேர்ந்த 3348 பேர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நாத்தாண்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 1019 குடும்பங்களைச் சேர்ந்த 3365 பேர்களும் மற்றும் மகாகும்புக்கடவல பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 3042 குடும்பங்களைச் சேர்ந்த 9562 பேர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடிதண்ணீருக்கு அதிக தட்டுப்பாடு நிலவுகின்றதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக 10206 குடும்பங்களைச்சேர்ந்த 35805 பேர்களுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாக அந் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மாவட்டத்திலுள்ள பல குளங்கள், குட்டைகளில் நீர் வற்றியுள்ளதாலும் மேய்ச்சல் நிலங்கள் இல்லாமலும் கால் நடைகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் அதிகளவிலான ஏக்கர் வேளாண்மைச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ)

## சட்டவிரோதமாகச் சாராயம் விற்பனை செய்த மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 16

விடுமுறை தினத்தில் சட்ட விரோதமாகப் பாரவூர்தியில் வைத்து மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் முடமாவடி மதுபானச்சாலைக்கு முன்பாக வைத்து நேற்றுக் காலை 8 மணியளவில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை பொஷன் போயாவை முன்னிட்டு நேற்றும் இன்றும் மதுபானச் சாலைகளை மூடுவதற்கான அறிவுறுத்தலை மதுவரித் திணைக்களம் நேற்றுமுன்தினம் வழங்கியது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் முடமாவடி மதுபானச்சாலைக்கு சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் பாரவூர்தியில் வைத்துச் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த மூவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பாரவூர்தியில் இருந்து சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கால் போத்தல் அளவுடைய 450 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

பாரவூர்திச் சாரதி மற்றும் இருவரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதிக்கும் சஹ்ரானுக்கும் இடையில் முடிச்சுப் போட முனைகிறார் ஹிஸ்புல்லா!

## துமிந்த திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 16

கடந்த 2015 ஆம் ஆண்டு தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக சஹ்ரான் செயற்பட்டார் என்று முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளமை, தற்போதைய விசாரணைகளுடன் தொடர்பற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமல்ல எந்தத் தேர்தலாக இருந்தாலும் மைத்திரியானாலும், மஹிந்தவானாலும் வேறு யார் போட்டியிட்டாலும் அவர்களுக்காகச் செயற்படுவதற்கும், ஆதரவளிப்பதற்கும் ஆதரவாளர்கள் இருப்பார்கள். இது சாதாரணமான விடயம். இதனடிப்படையில் தான் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஹிஸ்புல்லா மஹிந்தவுக்கும், சஹ்ரான் மைத்திரிக்கும் ஆதரவளித்துள்ளனர்.

இவ்வாறு இவர்கள் இருவரும் வெவ்வேறு தரப்பினருக்கு ஆதரவளித்தமையால் இவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட முறுகல் அவர்களுடைய தனிப்பட்ட விடயமாகும். தெரிவுக்குழுவில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இதைப் புரிந்து கொள்ளாததைப் போன்று ஹிஸ்புல்லா தொடர்பில்லாத ஒரு விடயத்தைக் கூறியுள்ளார்.

இது மாத்திரமல்ல அண்மையில் இலங்கையில் நாம் சிறுபான்மையினர் என்றாலும் சர்வதேசத்தில் பெரும்பான்மையினர் என்று கூறியிருந்தார். அண்மைக்காலமாக ஹிஸ்புல்லா இவ்வாறு முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்து வீண் சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றார். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை இவர் நிறுத்திக் கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்கு பூஜித ஜயசுந்தரவே பொறுப்பு

**கூறுகின்றார் வீரகுமார திஸாநாயக்க**

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் இடம்பெற்றுள்ள பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவே பொறுப்பு கூறவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடகம் ஒன்று கருத்து வெளியிடும்போதே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அனைத்து பொறுப்புக்களையும் பொலிஸ் மா அதிபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது குறித்து விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அவசியமில்லை.

தாக்குதல் குறித்து 119 பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கு அறிவித்திருந்தாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் – என்றார். (ஐ)

# நம் சுகம் கையில்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு என்பது மூத்தோர் மொழி. ஆனால் இன்று எம்மில் பலர் 'சேமிப்பு' என்ற ஒன்றைச் சிந்தித்து பார்ப்பதும்கூட இல்லை. இதன் முக்கியத்துவத்தை அறிந்திராமையினால் எம்மில் பலர் இத் திறமையை வளர்த்துக் கொள்ள நாட்டம் காட்டுவதுமில்லை.

இன்றைய காலத்தில் சேமிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும். இப் பழக்கமானது எமது குடும்பத்தின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதோடு எமக்கு மன நிம்மதியையும் பலத்தையும் தருகின்றன. அதுமட்டுமன்றி எமது நாட்டையும் அபிவிருத்தி பாதையில் வழி நடத்திச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

எமது வாழ்வின் சில செயற்பாடுகள் ஆரம்பத்தில் கசப்பானதாக இருப்பினும் அவற்றின் பலாபலன்கள் தித்திப்பானதாகவே அமையும். எனவே சேமிப்பு என்பதைச் சிரமமான காரியமாக கருதாமல் எமது அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களில் ஒன்றாகக் கருதி சேமித்தால் வாழ்வு வளம் பெறும்.

சேமிப்பு என்ற ஒன்றினை ஆரம்பிக்க முன்னர் எம்மை எவ்வாறு தயார்நிலை படுத்திக் கொள்ள வேண்டும் என்பது எம்மில் பலரின் ஐயம்.



யாழ் மருத்துவபீட குடும்ப சுகநல நிலைய முகப்புத் தோற்றம்

எம் மனம் அங்கும் இங்கும் அலையும் ஒரு குரங்கினைப் போன்றது. எனவே, எச் செயலை ஆரம்பிக்க முன்னரும் எமது மனதை திடப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இது எம் இலக்கினை அடைவதன் முதற்படியாக அமையும்.

மனதை திடப்படுத்திய பின்னர் சேமிக்கும் திறனைப் பற்றி தேடியறிந்து கொள்ள வேண்டும்.

சேமிப்பு என்றாலே எம்மில் பலருக்கு பணம் என்ற ஒன்று மட்டுமே நினைவில் வரும். ஆனால் இது பல்வேறு வளங்களை சேமிப்பதையும் குறிக்கின்றது. உதாரணமாக மின்சாரம், நீர், உணவு, எரிபொருள், நேரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இவ்வனைத்து வளங்களையும் சேமிக்கும் ஆற்றலை அறிந்து அதனை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இலக்குகள் அற்ற பயணங்களின் முடிவுகள் சாதாமானதாக அமைவதில்லை. எனவே எமக்கான குறுகிய கால அல்லது நீண்ட கால இலக்கினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது என்னுடைய இவ் விலக்கினை அடைவதற்கான என் திட்டமாகும் எனும் தெளிவான எண்ணம் வேண்டும். இதன் பின்னர் உங்களின் இலக்கினை நோக்கிய பயணத்தை ஆரம்பியுங்கள். நிச்சயமாக வெற்றியடைவீர்கள்.

எமது தேவைகளையும், விருப்பங்களையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் திறன் எம்மிடம் இருக்குமேயானால் நாமும் வெற்றியாளர்களே, அதுமட்டுமன்றி முன் யோசனையோடு எவ்விடயத்தையும் செய்வோமேயானால் நாம் தான் இன்றைய உலகின் கதாநாயகர்கள் இவை அனைத்தும் கடந்து சேமிப்பினை எம் உறவுகளுடனோ அல்லது நண்பர்களுடனோ இணைந்து சுவாரசியமாக செய்வது மற்றோர் வழிமுறையாகும். இவையனைத்தையும் எம் மனதை திடப்படுத்துவதோடு சேமிப்பினையும் இலகுவாக்கின்றது.

இன்றைய உலகில் பணம் அத்தியாவசியமான ஒன்றாகும். நம் அன்றாட வாழ்வினையும் கொண்டு நடத்திக் கொண்டு ஒரு தொகையினை சேமிப்பது என்பது எம் கெட்டித்தனமேயாகும். இதற்கு எம் தேவைகளை முதலில் பட்டியல்படுத்திக் கொள்ள வேண்டும், அதனை மிகவும் முக்கியமானது, ஒரளவு முக்கியமானது தேவையானது, நீண்ட கால நோக்கில் தேவையானது என்று வகைப்படுத்திக் கொள்ளலாம். இதனால் எம் தேவைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது செலவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் உங்களின் மாத வருவாயில் ஒரு பகுதியினை சேமிப்பதற்காக ஒதுக்கிய பின்னர், உங்களின் மாதாந்த இதர தேவைகளுக்காக பணத்தை செலவிடுங்கள்.

ஒவ்வொரு மாதமும் வீட்டுக்குத் தேவையான பொருள்களை மொத்த கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொள்வதனால் விலை தள்ளுபடிகளைப் பெறலாம். அதுமட்டுமன்றி இதனால் நேரத்தையும் எரிபொருளையும் கூட சேமித்துக் கொள்ள முடியும்.

மாத சேமிப்பினை நாளாந்த அடிப்படையில் மேற்கொண்டால் மாத இறுதியில் ஓர் கணிசமான தொகையினை சேமிக்க முடியும். மேலும் தொலைபேசி, மின்சார கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் கொடுப்பனவு வட்டியினை தவிர்க்க முடியும்.

மேலும் எங்களின் வருமானத்துக்கு ஏற்ற பொறுப்புடன் செலவீனங்களை மேற்கொள்வது எம்மையும் எமது குடும்பத்தையும் சந்தோஷமாக வாழ வழிவகுக்கின்றது. நாம் ஏனைய வளங்களான நீர், உணவு, எரிபொருள், மின்சாரம் காலம் போன்றவற்றை சேமிப்பதும் எமது பொருளாதாரதரத்தை மேம்படுத்துவதற்கு ஊன்றுகோலாக அமைகின்றது.

மின்சாரம் என்பது இன்று எமது வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டது. இன்று மின்தடை என்றாலே எமது அன்றாட வேலைகளை நடை முறைப்படுத்த இயலாத நிலைக்குள் தள்ளப்பட்டு விடுகின்றோம். ஆனாலும் 5-10 % அளவிலான மின்சக்தி எம்மை அறியாமலேயே வீண்விரயமாகின்றது என்பது கவலைக்கிடமானதாகும்.

தேவையான நேரங்களில் தேவையான பொருள்களை பயன்படுத்துவது நேர்த்தியான வழிமுறையாகும். எனவே முடிந்தவரை பகல் நேரங்களிலே இயற்கையாக கிடைக்கும் சூரிய ஒளியினை பயன்படுத்துவது சிறப்பு. மேலும் மின் விசிறிகளை பயன்படுத்தாது இயற்கையான காற்றினை அனுபவிப்பது எமது ஆரோக்கியத்துக்கு வழி வகுப்பதோடு தேவைகளை முடிந்து அந்த இடத்தை விட்டு வெளியேற முன்னர் மின் விசிறி, மின் குமிழ்களை மறக்காமல் அணைத்துவிட்டு வெளியேறினால் கணிசமான அளவு மின்சாரம் வீண்விரயமாவது தடுக்கப்படும்.

மேலும் வீட்டுக்குத் தேவையான மின்சாதன உபகரணங்களை கொள்வனவு செய்யும்போது அவற்றின் மின் பாவனைக்கு ஏற்ற வகையில் கொள்வனவு செய்வது சிறப்பானது.

ஒரு கிழமைக்கு தேவையான உடைகளை ஒரே சமயத்தில் iron செய்வதால் மின்சாரமும் நேரமும் மீதப்படுகின்றது. வீடுகளிலுள்ள குளிர் சாதனப்பெட்டிகளை அடிக்கடி திறந்து மூடுவதை தவிர்ப்பதன் மூலமும், சமைத்த உணவை சிறிது நேரம் சூழல் வெப்ப நிலையில் வைத்த பின்னர் குளிரூட்டியில் வைப்பதன் மூலமும் மின்சார வீண்விரயத்தை தவிர்க்கலாம்.

நேரம் பொன்னானது, நம் வாழ்வில் மூன்றில் ஒரு பங்கு நித்திரையில் செலவழிகின்றது. எனவே நேரத்தை பயனுள்ள வழியில் செலவிடுவது இன்றியமையாத ஒன்றாகும். இதற்கு எம் நேரமானது எவ்வகையில் வீணாக செலவழிகின்றது என்பதை கண்டறிந்து அவற்றைப் பயனுள்ள வழியில் கழிக்க எம்மை பழக் கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் கால அட்டவணைகளிற்கு ஏற்ப நடந்து கொள்வதும் திட்டமிட லுக்காக நாள் குறிப்பொன்றினை பயன்படுத்துவதும் சிறப்பான நேர முகாமைத்துவத்தை கடைப்பிடிக்க உதவுகின்றது. எடுத்த பொருள்களை எடுத்த இடத்தில் வைப்பதன் மூலமும் ஒரு நேரத்தில் எம்மால் இயன்ற இரு வேலைகளை செய்வதன் மூலமும் மேலும் நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும்.

இவ்வாறே நாம் பயன்படுத்தும் ஏனைய வளங்களையும் எம்மால் சேமிக்க முடியும்.

தேவைக்கு அதிகமான கொள்வனவினை தவிர்ந்து, தனிநபர் ஒருவருக்கான சாராசரி உணவினை கணக்கீட்டு உணவு பொருட்களை மாதாந்த அடிப்படையில் கொள்வனவு செய்வதன் மூலம் உணவு வீண் விரயத்தை தடுக்க முடியும்.மேலும் முறையான களஞ்சியப்படுத்தலும், உணவை கெடாமல் பேணுவதற்காக புதிய முறைகளைக் கையாளுவது, உணவை சேமித்து வைக்க வழி வகுக்கின்றது. மேலும் காலாவதி திகதிகளை கணக்கில் கொண்டு கொள்வனவு செய்வதாலும் உணவின் வீண்விரயத்தைத் தடுக்க முடியும்.

மேலும் நாமும் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக பேணுவதன் மூலமும் நீர், வளி மாசடைவதைத் தவிர்த்துக் கொள்ளுவதன் மூலம் பல தொற்றுநோய் நிலைமைகளில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியும். இதனால் எமது மருத்துவ செலவீடுகளை குறைத்துக் கொள்வதோடு நேரத்தையும் சேமித்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருள்களை உரிய முறையிலும், திட்டமிட்டு கையாள்வதன் மூலமும் எமக்குத் தேவையான வளங்களைச் சேமித்துக் கொள்ள முடியும்.

சேமிப்பு என்பது ஓர் தேர்வாகும். இத்தேர்வில் நாமும் தேர்ச்சியடைவதோடு எம் வருங்கால சந்ததியினரை தேர்ச்சியடைய செய்வதற்கான வழிமுறைகளை கற்றுக் கொடுப்பது எமது கடமை.மேலும் சேமிப்பானது ஆரம்பத்தில் சற்று கடினமாக இருப்பினும் முயன்றால் எம்மாலும் எம் வளங்களை சேமித்து மகிழ்வாக வாழ முடியும் என்பதில் ஐயமில்லை. சேமிப்பு என்பது ஒரு தனிமனித வாழ்வின் அங்கமாக இருப்பினும் இது ஓர் ஆரோக்கிய வாழ்வின் ஒரு பங்காகும்.

**தொடர்புகளுக்கு :** *யாழ்ப்பாண மருத்துவபீட சமூக மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் குடும்ப மருத்துவ நிலையம், கோண்டாவில்.*

**021 205 3760**

**ஆக்கம் :**

Dr.S. **குமரன்** (MBBS, DFM, MD)

*(குடும்ப வைத்திய நிபுணர்)*

Dr. J. **ஹர்சிகா** (MBBS)

# அறிவூட்டும் தந்தையை கௌரவித்து மகிழ்வோம்!



'அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம். தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம். இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம். பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்" என்று எம்.ஜி. ஆர். பாடுவது போல் ஒரு திரைப்படத்தில் பாடல் காட்சி இடம் பெற்றிருக்கும்.

அன்புக்கு அன்னை, அறிவுக்கு தந்தை என்பதை இந்த பாடல் வரிகள் மூலம் கவிஞர் கண்ணதாசன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஒரு குடும்பத்தில், குழந்தைகளின் ஆரோக்கியத்தை பேணும் பொறுப்பு எப்படி தாய்க்கு இருக்கிறதோ, அதேபோல் அந்த குழந்தைகளின் முன்னேற்றத் தில் தந்தையின் பங்களிப்பு முக்கியமாக இருக்கிறது.

இருந்தாலும், குடும்பத்திற்காக மாடாய் உழைத்து, ஓடாய் தேயும் தந்தையைவிட, அன்பைபொழியும்தாயைத்தான் பெரும்பாலான

## இன்று தந்தையர் தினம் ஆகும்

பிள்ளைகளுக்கு அதிகம் பிடிக்கிறது.

உலகம் முழுவதும் 'அன்னையர் தினம்' என்பது காலம் தொட்டே கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால், 'தந்தையர் தினம்' என்பது 1910 ஆம் ஆண்டில் இருந்து தான் கொண்டாடப்படுகிறது.

அதற்குக் காரணமாக விளங்கியவர் அமெரிக்காவைச் சேர்ந்த சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டோட் என்ற பெண் ஆவார்.

அவரது தாயாரின் மறைவுக்கு பிறகு, அந்தக் குடும்பத்தில் இருந்த 6 பிள்ளைகளையும் தந்தை வில்லியம்ஸ் தான் கடும் சிரமத்திற்கு மத்தியில் வளர்த்தார். தாய்க்கு தாயாகவும், தந்தைக்கு தந்தையாகவும் இருந்து கடமையை நிறைவேற்றிய தனது தந்தையை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது.

அதன் அடிப்படையில், அன்னையர் தினத்தைப் போல் தந்தையர் தினத்தை யும் கொண்டாட வேண்டும் என்று அவர் பிரசாரம் செய்தார். அவரது கோரிக்கையை, அப்போதைய ஸ்போக்கேன் நகர கவர்னர் அங்கீகரித்தார். அதன் பின்னர் தான், தந்தையர் தினமும் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்று உலகம் முழுவதும் 52 நாடுகளில் ஜூன் மாதம் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமை 'தந்தையர் தினம்' கொண்டாடப்படுகிறது.

*(13 ஆம் பக்கம் பார்க்க...)*



## யாழ்ப்பாணம் - நீராவியடி

ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய

## தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகிறேன்



18 ஆம் நூற்றாண்டில் ஆன்மிகத்தின் தாயகமாம் இந்தியா வின் வேதாரண்யம் எனும் புனித பதியில் இருந்து வந்து யாழ்ப்பாணம் நீர்வாவிப் பிரதேசத்தில் குடியேறிய பூதர் என்பவரால் ஆராதிக்கப்பட்ட விநாயகப் பெருமானின் அமைவிடம் வளர்ச்சியடைந்து இன்று ஸ்ரீ யெஜ நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் எனத் திகழ்கிறது.

இன்று 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்தில் இவ்வருடத்திற்கான இரத்தோற்சவம் நடைபெறுவது சிறப்பாகும். இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறித்து நிற்கும் மஹோற்வங்களில் இரத்தோற்சவம் அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கின்றது. அதாவது வழிபடும் அடியார்களின் தீய குணங்களை அழித்தலைக் குறிக்கும்.

ஆதலால் இவ்வுற்சவத்தில் வழிபாடாற்றும் அடியார்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மிடம் உள்ள ஏதாவது ஒரு தீய பழக்கத்தையாவது இன்றிலிருந்து கைவிடுவோம் என சங்கற்பம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவோம்.

இன்றைய இரத்தோற்சவம் சிறப்பாக நடைபெறவும். இதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில்**
**சுவாமி சிதாகாசானந்தா**
**சின்மயா மிஷன்.**
**யாழ்ப்பாணம்.**

## அழகு குன்றா ஆலயம்



நீராவியடிப்பகுதியில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ நிகழ்வுகள் மிகவும் சிறப்புற நடைபெறுவது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் விகாரி வருட துவஜாரோகண மகோற்சவ நிகழ்வுகள் 07.06.2019ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16.06.2019ல் எம்பெருமான் இந்திரத் தேரேறி தமது அடியார்களின் ஆவண மலங்களைப் போக்கி அவர்களுக்கு அருளாசி வழங்கும் நிகழ்வுடன் முடிவுறும். இச் சந்தர்ப்பத்தில் எனது ஆசிச் செய்தியொன்றை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இராம இராவண யுத்தத்தில் இராவணனைக் கொன்ற இராமபிரானுக்கு பிரமஹத்தி தோஷம் பீடித்திருந்ததாகவும் வேதாரணியம் ஆலயத்திலுள்ள விநாயகரை வணங்கி அத்தோம் நீங்கப் பெற்றார் என்பதும் வரலாறு. அத்துணை வரலாற்றுச் சிறப்புமிக்க விநாயகரை 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பூதர் எனும் பக்தர் காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக இலங்கைக்கு எடுத்துவந்து யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக கூறப்படுகின்றது.

இத்துணை சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டுகளைக் கடந்து தற்போதும் புதுப்பொலிவுடன் வீற்றிருந்து அருளாசி புரிவது நாம் செய்த பாக்கியம். ,

இவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விநாயகர் ஆலய இரதோற்சவ நிகழ்வுகள் மிகச்சிறப்புற அமைய இறைவனை வேண்டி இவ் இரதோற்சவ நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கும் பக்த அடியார்கள் அனைவருக்கும் வீரகத்தி விநாயகரின் பூரண அருளாசி கிட்ட வாழ்த்தி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்.**

## யாழ்.மாநகர ஆணையாளரின் ஆசிச்செய்தி



பழைமையும், பெருமையும் பொருந்திய சைவ சமயத்தின் முதற்கடவுள் விநாயகப் பெருமானின் புகழ் மிக்க ஆலயமான ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தி வருவதற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்கள் அழிந்து போகாமல் பேணும் வகையில் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் வருடாந்த மஹோற்சவங்களை நடத்தி வரும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாலய மஹோற்சவங்கள் வருடந்தோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு அருள் மிகு விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. த.ஜெயசீலன்**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## இன்று [2019.06.16] ஞாயிற்றுக்கிழமை

## ஆளுநரின் செயலாளர் வாழ்த்துச் செய்தி



யாழ் நகரில் நீராவியடிப்பகுதியில் வீற்றிருந்து அருள்பாலித்து கொண்டிருக்கின்ற ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப்பெருமானின் இரதோற்சவத்திற்கு ஆசிச்செய்தி வழங்க விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப்பிறவி நமக்கு கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம்பெறும் பொருட்டே யாகும்.- என்பது யாழ்ப் பாணத்து நலூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் நன்மொழி. அரிதினும் அரிதாகிய இந்தப் பிறப்பு இறைவனால் எமக்குத் தரப்பட்டது. இவ்வுலகில் ஓரறிவுடைய புல்பூண்டு முதல் ஆறறிவுபடைத்த மனிதர்வரை எண்ணில்லா உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றில் மேலான பிறப்பு மனிதப் பிறப்புத்தான். மற்றைய பிறப்புக்கு இல்லாத மனம் எனும் பகுத்தறிவு ஆகிய ஆறாவது அறிவு மனிதனுக்கே உண்டு. இந்த பகுத்தறிவுள்ள மனிதர்கள் தங்களைப் படைத்து வாழ வைக்கின்ற இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றார்கள்.

அவ்வகையில் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த மகோற்சவப் பெருநாள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருப்பது அவ்வூரினுடைய பக்தியை எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

இந்த ஆலயத்தின் மகோற்சவம் 07.06.2017 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் நடைபெறுகின்றது. நாளை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறுகின்றது. இந்த ஆலயத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் வழிபாடுகள் நடைபெறும் போது அமைதியாக இருந்து அடியவர்கள் யாவரும் பார்த்து விநாயகரை வழிபட்டு, மகிழக்கூடிய வகையில் அமைதியும், ஆனந்தமும், அழகும் நிறைந்த வகையில் இரதோற்சவ திருவிழா அமைந்துள்ளது.

ஆலய உற்சவ காலங்களிலும், மகோற்சவ காலங்களிலும் மக்கள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகனின் அருளாசிகளை பெற்று நல்வாழ்வு வாழவும், நாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலைபெற்று எல்லோரும் இன்புற்று வாழவும் பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
**ஆளுநரின் செயலாளர், வட மாகாணம்.**

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துக்கள்!...



அன்பும் அறமும் மக்களை வழி நடத்தி செல்ல வேண்டும். ஆன்மீக வெளிச்சம் எமது வாழ்விடங்கள் தோறும் வீச வேண்டும். இதுவே இன்புற வாழ நினைக்கும் எமது மக்களின் ஆழ்மன நம்பிக்கை!

யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்! நரகத்தில் இடர் படடோம்!

இத்தகைய ஆன்மீக தத்துவத்தை ஏற்று எமது மக்களின் மகிழ்ச்சிக்கான சகல முயற்சிகளுக்கும் கரம் கொடுப்பதே நம் பணி! கடந்த கால யுத்தத்தின் அவலப்பெருங்காட்டில் இருந்து எமது மக்கள் மீண்டு வந்திருந்தாலும், அதன் வடுக்களில் இருந்தும் மீண்டெழ வேண்டும். தமது வாழ்வில் நிரந்தர நிம்மதி நிலவ வேண்டும் என்ற நம்பிக்கையோடுதான் ஸ்ரீ ஜெய நீராவி விநாயகப் பெருமானின் சந்நிதானம் நோக்கியும் மக்கள் திரண்டு வருகிறார்கள்!

அந்த வகையில் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் சிறப்புற நிகழ வேண்டும் என்றும்... மேற்படி ஆலயப்பணியில் ஈடுபட்டு வரும் ஆலய பரிபாலகர் திருவாளர் இரகுநாத முதலியார் உட்பட நிர்வாகத்தினர் மற்றும் பணியாளர்கள் அனைவரதும் ஆன்மீக முயற்சிகள் யாவும் வெற்றி பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்!

என் கடன் பணி செய்து கிடப்பதே! அறம் வெல்லும்!.. அநீதி தோற்கும்!

**டக்ளஸ் தேவானந்தா நா.உ.**
**செயலாளர் நாயகம்- ஈ.பி.டி.பி.**

## சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்வோம்!



பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களான ஆலயங்களும் ஆலய திருவிழாக்களும் எம் சமூகவாழ்வின் அர்த்தங்களாகி அழகு தருவன. இந்த வகையில் யாழ். நகரை அண்டிய, பொன் பூத்த நீராவிப் பூங்கோயில் வாழ்வுகந்தகோயிலென, இருபாலை சேனாதிராச முதலியார் அன்று நயந்த, தொன்மைச் சிறப்புமிக்க வீரகத்தி விநாயகர் தேர்த் திருவிழா தரும் ஆத்மபலம் அளவிலாதது.

காலனித்துவ காலத்து மண்குடிசையொன்றில் அருளாளர் பூதரினால் தொடங்கப்பெற்ற கோயில் ,அவர் பரம்பரையினராலும் ஊர் மக்களாலும் கண்ட வளர்ச்சியும். பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் திருவாளர் வை.இரகுநாத முதலியார் தலைமையில் கண்டுவரும் எழுச்சியும் உயர்வானது. சமூகப் பெருவிழாவான நீராவிப் பூங்கோயில் தேர்திருவிழாவில் ஊர்கூடி ஒன்றுபட்டு, பாரதி வேண்டியவாறு,

‘நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடுவதும்
உளமெனும் நாட்டை ஒரு பிழையின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறேயனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்’

**நோக்கமாகக் கொண்டு வடம் பிடிப்போம் ; வாழ்வு பெறுவோம் !**

**பேராசிரியர் கலாநிதி.நா.சண்முகலிங்கன்**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## ஆசிச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தலைநகராக விளங்கும் யாழ் நகரின் வட புலத்தே நீராவியடிப் பகுதியில் தென் இந்தியாவில் இருந்து வேதாரணியம் வழியாக வந்து குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜெய . நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறு மண் குடிசையில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று பஞ்சதள கோபுரத்துடன் வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வாறு வளர்ச்சி காண்பதற்கு அது சைவத்தையும் தமிழையும் காக்கும் நன் நகரில் அமைந்துள்ளதே என்றால் மிகையாகாது. தன்னை தேடி வந்து வழிபடும் அடியார்களுக்கெல்லாம் அள்ளி அருள் கொடுக்கும் இவ் ஆலயம் இன்று பல பரம்பரையினரை கடந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் இவ் வருடம் நடைபெறும் வருடாந்த மஹோற்சவமானது மிகச்சிறப்பாக நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

இம்மஹோற்சவ நாளிலே ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய ஆலய நிர்வாகிகள், அடியார்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு விநாயகப்பெருமானின் இஷ்ட சித்திகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (நா.உ)**
**கல்வி இராஜாங்க அமைச்சர்.**

## யாழ் மாநகர முதல்வரின் வாழ்த்து



சீரும் சிறப்பும் பெற்ற வண்ணார் பண்ணை கிழக்கிறையில் பருத்திப்புலம் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளி இருப்பவர் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி பிள்ளையார். வரலாற்றுப் புகழ் மிக்க நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் மஹோற்சவம் இவ்வருடம் 07.06.2019 தொடக்கம் 17.06.2019 வரை இடம்பெறுவதையிட்டு அகமகிழ்கின்றேன். இக்கோவிலின் பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரின் அயராத முயற்சியும் அவரது பாரியாரின் ஒத்துழைப்பும் இன்றும் திறம்பட இடம்பெறுவதால் நீராவி வீரகத்தி விநாயகரின் நித்திய,நைமித்திய கருமங்கள் திறம்பட நடைபெற்று வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இதுபோல் என்றென்றும் உற்சவங்களும் மஹோற்சவமும் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற வேண்டும் என நீராவி வீரகத்தி விநாயகனை வேண்டுகிறேன்.

மேலும் பரம்பரை பொறுப்பாளரின் பணி சிறக்கட்டும் என வாழ்த்துகின்றேன்

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்,யாழ். மாநகர சபை.**

# இன்று தேரேறி வரும் நீராவியடி வீரகத்தி விநாயகர் நல்லருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்

யாழ் பான்சி மஹால் Yarl Fancy Mahal
Wholesala & Retail Delers in All Kainds of Bage
இல.07, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P:- 021 222 8403 No.07, Grand Bazaar, Jaffna.

சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்
இல.55,57, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
021 222 2901, 021 222 5003

SRI MATHAVAN
Cycle, Cycle Spare Parts
No,97,Kasthuriyar Road, Jaffna.

யாழ். காலணியகம்
YARL TRADES CENTER
Agents for Bata
யாழ். பாட்டா
YARL Bata
11,modern market, Hospital Road, Jaffna.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021-222 2063

பொன்னம்பலம்
அரிசி ஆலையும் அரைக்கும் ஆலையும்
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்.

Golden Eagle Kt (pvt) Ltd
(APPROVED BY MINISTRY OF DEFENCE)
No.758 Hospital Road, Jaffna.
Phone 021 222 5102
Fax 021 222 1290
E.mail- goldeneagle@gmail.lk
Chairmon & Managing Director K.Tharmakulasingam
Director Mrs.Neela Tharmakulasingam
OUR SERVICES
★Golden Eagle Security ★Gollop man power ★Gaily Cleaning

KAJI VIDEO கஜி வீடியோ
தற்போது புதிய முகவரியில் கஜி வீடியோ
486A, K.K.S. Road, Jaffna 021 222 9316

ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 20, பெரியகடை யாழ்ப்பாணம் 021 2222740

NEW SCIENCE WORLD
கணித, உயிரியல் பிரிவுகளுக்கான தமிழ் மொழி மூல English Medium வகுப்புகள். விஞ்ஞானப் பிரிவுக்கான தனித்துவமான நிறுவனம்.
நாவலர் வீதி - பிறவுண் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

K.S.M Communication
N.Harikrishna Proprietor
PhotoCopy
Laminating
Local Call
Internet Call
Colour Print
Scaning
Typing
Fax & E - mail
T.P. : 021 222 3079
Fax : 021 221 6622
Email : ramcom2008@gmail.com
146, Morden Market,Jaffna.

## சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆயிரக்கணக்கானோர் திரண்டிருக்க

# வடகொரியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறதா



வட கொரியாவில் பொது இடத்தில் தூக்கிலிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட 318 இடங்களைத் தாங்கள் கண்டு பிடித்துள்ளதாகக் கூறுகிறது தென் கொரியாவில் உள்ள ஓர் அரசு சாரா அமைப்பு.

இடைநிலை நீதி பணிக்குழு எனும் அரசு சாரா அமைப்பு வட கொரியாவை விட்டு வெளியேறிய 610 பேரை சந்தித்து, உரையாடி இந்த அறிக்கையை தயார் செய்துள்ளது.

மாட்டைதிருடியவர்கள்முதல் தென் கொரிய தொலைக் காட்சியை பார்த்ததவர்கள் வரை பல்வேறு காரணங்களுக்காக கடந்த பல தசாப்தங்களாக கொல்லப்பட்டவர்கள் குறித்து தகவல்களை இந்த அமைப்பு சேகரித்துள்ளது.

**கொலை மேடைகள்**

ஆறுகள், வயல்வெளிகள், சந்தை பகுதிகள், பள்ளிகள், விளையாட்டு மைதானங்கள் என பல்வேறு பொது இடங்கள் அருகில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டனஎனக்இந்த அமைப்பு கூறுகிறது.

பொது இடங்களில் நிறைவேற்றப்பட்ட இந்த மரண தண்டனையை பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கானோர் திரள்வார்கள் என செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரண தண்டனைக்கு உள்ளானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக குழந்தைகள் உட்பட இந்த மரண தண்டனையை பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டனர் என இந்த அறிக்கை விவரிக்கிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு இறந்தவர்களின் உடல்கள் அரிதாகத்தான் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

வட கொரியாவில் உயர் பதவிகளில் இருந்த பலருக்கு கடந்த காலங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்டு இருக்கிறார்கள். கிம் ஜோங் உன்னின் உறவினர் மீது இராஜதுரோக குற்றச்சாட்டு கூறப்பட்டது. ஆனால், உண்மையில் இவ்வாறு மரண தண்டனை கள் விதிக்கப்படுகிறதா? அதன் உண்மைதன்மை என்ன என்பது கேள்விக் குறிதான். பல சமயங்களில் அது பொய்யாகவும் இருந்திருக்கிறது.

**ஏழு வயதுச் சிறுவன்**

மரணதண்டனைநிறைவேற்றப்படுவதை ஏழு வயதுச் சிறுவன் கூட பார்த்திருக்கிறான் என இந்த அறிக்கை கூறுகிறது.

சிலமரணதண்டனைகள்தொழிலாளர் முகாம்களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசியல் குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுவோர் இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு, சுரங்கப்பணிகளில் ஈடுப்படுத்தப்படுவார்கள்.

தொழிலாளர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுபின்னர்அங்கிருந்து தப்பிய ஒருவர், சீனாவுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த மூன்று பெண்கள் கொல்லப்படுகின்றமையை காண எப்படி நிர்ப்பந்திக்கப்பட்டோம் என்று கூறியதை பதிவு செய்துள்ளது இந்த அறிக்கை.

இது உங்களுக்கும் நேரலாம் என மக்கள் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

**எப்படி கொல்லப்படுவார்கள்?**

பொதுவாக துப்பாக்கியால் சுட்டு தான் கொல்வார்கள் என ஒருவர் கூறி உள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை, மூன்று பேர், மூன்று முறை துப்பாக்கியால் சுடுவார்கள்.

இந்தப் பணியில் ஈடுபடும் நபர்கள் மது அருந்தி இருப்பார்கள்.

இந்த அறிக்கையை தயாரித்த குழுவில் இருந்த எதான் சின், இவ்வாறாக மரண தண்டனை விதிப்பது இப்போது குறைந்துள்ளது. தங்களை சாதாரண அரசாக கருத வேண்டுமென வட கொரியா விரும்புகிறது. அது கூட காரணமாக இருக்கலாம். ஆனால், அதே நேரம் வடகொரியா மேலும் ரகசியமாக மரண தண்டனையை நிறைவேற்றுகிறதா என்று தெரியவில்லை என்கிறார்.

**உண்மைத்தன்மை**

வட கொரியாவில் உயர் பதவிகளில் இருந்த பலருக்கு கடந்த காலங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்டு இருக்கிறார்கள். கிம் ஜோங் உன்னின் உறவினர் மீது இராஜதுரோக குற்றச்சாட்டு கூறப்பட்டது.

ஆனால், உண்மையில் இவ்வாறு மரண தண்டனைகள் விதிக்கப்படுகிறதா? அதன் உண்மைதன்மை என்ன என்பது கேள்விக் குறிதான். பலசமயங்களில்அது பொய்யாகவும் இருந்திருக்கிறது.

2013 ஆம் ஆண்டு வட கொரிய பாடகி ஹியோன் சாங்குக்கு பொது இடத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தென் கொரியா நாளிதழ் செய்தி வெளியிட்டது.

ஆனால், 2018 ஆம் ஆண்டு தென் கொரியா சென்ற வட கொரியா குழுவில் அவரும் இருந்தார். ★





# திறமைசாலிகளாகத் திகழ தைரியம் தான் முக்கியம்

தைரியத்தின் முதல் எதிரி யார் என்றால் தயக்கமும், தாழ்வுமனப்பான்மையும் தான். இந்த இரண்டையும் முதலில் ஒரு மனிதன் அடி யோடு ஒழித்து விட்டால் கண்டிப்பாக தைரியத்துடன் தான் காணப்படுவான்.

இன்று பூமியில் திறமையானவர்கள் மட்டுமே பெரிய பெரிய பதவிகளில், அரசியல்வாதிகளாக, தொழில் நுட்பக் கலைஞர்களாக இருக்கி றார்கள். ஏன் விஞ்ஞானிகளைக் கூட எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் தான் திறமையின் மொத்த உருவமே.

இவர்கள் அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் தங்களின் திறமைகளைதங்களின்தகுதியினைத் தங்களின் ஆற்றலை எப்படியோ ஒரு விதத்தில் மக்கள் உணரும்படி அறிந்திருக் கிறார்கள்.

எனவே அவர்களை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டனர். வேறு தகுதியானவர்கள் வேறு திறமையானவர்கள் இந்த பூமியில் இல்லையாயென்றால், இருக்கிறார்கள். பிறகு ஏன் அந்த தோராயமான நபர்கள் மட்டும் வெளியே தெரிகிறார்கள் என்றால் மீதம் உள்ள லட்சக்கணக்கான திறமைசாலிகளுக்கு போதுமான மனத் தைரியம் இல்லை.

அதாவது தனது திறமையைப் பயன்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் போதிய தைரியம், துணிச்சல் இல்லாமல் அவர்கள் தங்களது வாய்ப்பைக் கோட்டை விட்டுவிடுகின்றனர். எனவே இந்த கால கட்டத்தில் உண்மையான திறமைசாலி வெளியே தெரியாததற்குக் காரணம் என்னவென்றால் போதிய துணிச்சல் இல்லாததே.

இன்று பூமியில் திறமையானவர்கள் மட்டுமே பெரிய பெரிய பதவிகளில், அரசியல்வாதிகளாக, தொழில் நுட்பக் கலைஞர்களாக இருக்கிறார்கள். ஏன் விஞ்ஞானிகளைக் கூட எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் தான் திறமையின் மொத்த உருவமே.

வயதான பெரியவர்கள் பெரும்பாலும் வாழ்வில் அனைத்து விதமான அனுபவங்களைப் பெற்று விடுவதால் அவர்கள் எந்த ஒரு காரியத்தையும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்வதில்லை. எந்த ஒரு விடயத்தையும் ஆர அமர யோசித்துதான் செய்வார்கள். அத னால் அவர்களுக்கு பெரும்பாலும் தோல்விகள் ஏற்படுவதில்லை. அவர்களுக்கு என்ன செய்தால், எது நடக்கும் என்றுதான் முன்பு பெற்றஅனுபவத்தின்வாயிலாக ஒரு கணிப்பு கணித்து விடுகிறார்கள்.

வயதான பருவத்தில் ஏற்படும் தைரியம் காய்ந்த சுரைக்காய் ஆக அதுவும் கறிக்கு உதவாது. மாறாக இளமைப் பருவத்தில் உள்ளதே ஒரு தைரியம். அது தான் நம்மை எந்த ஒரு செயலையும் எந்த ஒரு சாதனையையும் எந்த ஓர் இலக்கையும் எந்த ஒரு லட்சியத்தை யும் சாதகமாகநினைக்கவைத்து அதை சாதிக்கதக்கஏற்பாடுகளையும் செய்கின்றது. எனவே எந்த ஒரு மனிதனும் இளமைப் பருவத்தில் உள்ள தைரியத்தைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே புத்திசாலி இளைஞர்கள் கண்டிப்பாக அந்த தைரியத்தை ஆக்கபூர்வமான வழியில் பயன்படுத்தி கண்டிப்பாக வெற்றி அடைவார்கள். தைரியத்தின் முதல் எதிரி யார் என்றால் தயக்கமும், தாழ்வு மனப்பான்மையும் தான். இந்த இரண்டையும் முதலில் ஒரு மனிதன் அடியோடு ஒழித்து விட்டால் கண்டிப்பாக தைரியத்துடன் தான் காணப்படுவான்.

இந்த பரபரப்பான கம்ப்யூட்டர் உலகத்தில் அது எப்படி சாத்தியம் என்றால் தியானம் ஒன்றே தான் வழி. அதாவது தியானத்தின் மூலம் எந்த ஒரு பண்புகளையும், குண நலன்களையும் மாற்ற முடியும். அதன் பின்னர், நமக்கு கண்டிப்பாக ஓர் ஒளி மயமான எதிர்காலம் அமையும்.

**கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'ரில்கோ' ஹோட்டலின் 2ஆவது மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்டோர் பதின்மம் கழிந்தும் சுய மதிப்பீடு மாநாடு நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவரது உரை இங்கு தரப்படுகின்றது.**



# முஸ்லிம் தலைவர்கள், சிங்கள தலைமைகள் ஒற்றுமையாகச் செயற்படும்போது

## எம்முள் சிலர் சிங்கள அரசியல்வாதிகளுக்கு 'ஆமாம்' போடும் அவல நிலை!

பாதிக்கப்பட்டோர் – பதின்மம் கழிந்தும்' என்னும் தலைப்பில் ஒரு சுய மதிப்பீட்டு நிகழ்வை யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகமும் யாழ்ப்பாணம் தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பான Differently Abled Tamil Associationk இன்றையதினம் இணைந்து நடத்த முற்பட்டிருப்பது மகிழ்விற்குரியது.

போரின் பின்னர் எமக்கான தேவைகள் ஏராளம் இருந்தன. அவற்றை அடையாளப்படுத்த வேண்டியிருந்தது. இருட்டில் தேட முற்படுபவர்களாக இல்லாது எமது தேவைகளைக் கண்டறிந்து, ஆராய்ந்து, அடையாளப்படுத்தி, அவற்றை எவ்வாறு தீர்த்து வைக்க முடியும் என்பது சம்பந்தமாக நான் 2013ல் பதவி ஏற்றதும் அப்போதைய ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி சுபினே நந்தி அவர்களுடன் பேசினேன். 2003ல் தயாரித்தது போல் வடக்கு மாகாணத்திற்கான தேவைகள் மதிப்பீட்டை (Needs' Assessment) தயாரித்துத் தரும்படி வேண்டினேன். அப்போது இருந்த அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷவுடையது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் போரின் முடிவில் பாதிக்கப்பட்டோருக்காக எதையுஞ் செய்யாது வாளாதிருந்தது என்ற குற்றச்சாட்டுகக்ள் அப்போது இருந்தன. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் சுபினே நந்தி இருந்தார். அவருக்கும் அப்போதைய அரசாங்கத்திற்கும் இடையில் மிக நெருக்கமான உறவு இருந்தமை யாவரும் அறிந்ததே.

முழுமையான தேவைகள் மதிப்பீட்டைச் செய்வதாக ஒப்புக்கொண்டதன் பின்னர் மனிதஇன நலம் சம்பந்தமான umanitarian சபை அறிக்கையை மட்டும் பெறவே அவர் முன்னின்றார். முழுமையான அறிக்கை பெறப்பட்டால் சாட்சியில் யுத்தத்தின் போது அரசாங்கம் செய்த அட்டூழியங்கள் வெளிவந்து விடும் என்ற பயம் அரசாங்கத்திற்கும் இருந்தது, அரசாங்கத்துடன் நல்லுறவைப் பேணி வந்த சுபினே நந்தியிடமும் இருந்தது.

அந்த அறிக்கையில் பல பிழையான தகவல்கள் இடம்பெற்றிருந்தன. உதாரணத் திற்கு கணவன்மார்களைப் போரில் இழந்த பெண்களின் தொகை வடமாகாணத்தில் சுமார் 49ஆயிரமாக இருந்தது. ஆனால் அவர்கள் அறிக்கைப்படி சுமார் 7500 பேரே போரில் கணவன்மார்களை இழந்தவர்கள். 29 ஆயிரம் பேரின் கணவன்மார்கள் இயற்கை மரணம் எய்தினார்கள் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 29ஆயிரம் பேர் அரச படைகளால் அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் என்ற விவரத்தை வெளிக் கொண்டுவர வதிவிடப் பிரதிநிதி கூட பின் நின்றார்.

அரசாங்கம் மாறிய பின்னர் இது சம்பந்தமாக பிரதமருடன் பேசினேன். தற்போது இது பற்றி பிரதமர் தலைமைத்துவத்தில் பாஸ்கரலிங்கம் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். இதுகாறும் இவை சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி நாம் அறிந்திருந்தால்தான் அடுத்த கட்டத்திற்குச் செல்லலாம். தரவுகள் சரியாக இருந்தால்தான் புள்ளி விவரங்களை வழி நடத்திச் செல்லாம். பிழையான தகவல்களை அரசாங்கம் தந்துதவினால் எமது பிரச்சினைகள் சம்பந்தமாக உரிய நிவாரணங்களைப் பெற முடியாது போய்விடும்.

ஆகவே உங்களின் சுயமதிப்பீட்டின் வழி முறையானது இதுவரை ஐ.நா. ஸ்தாபனத்தினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றிப் போதிய அறிவுபெற இடமளிப்பதாக இருக்க வேண்டும். தற் போதைய ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம் வடகிழக்கு தேவைகள் பற்றி இதுவரை தயார் செய்த சகல அறிக்கைகளினதும் பிரதிகள் பெறப்பட வேண்டும். பாஸ்கரலிங்கம் அவர்களுடன் அல்லது வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதனுடன் ஒரு நேரத்தை ஒதுக்கி அவர்களால் இதுவரை காலமும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், பூரண விவரங்கள் போன்றவை பெறப்பட வேண்டும். அதன் பின்னர் தான் உங்களின் அமைப்பு முறையான சுயமதிப்பீட்டில் இறங்க வேண்டும்.

இந்த நிகழ்ச்சி அமைப்பாளர்கள் எம்மை சந்திக்க வந்த போது இந்த சுயமதிப்பீடு மேற் கொள்ளப்படுவதன் நோக்கம் என்னவென்று கேட்கப்பட்டது. இந்த நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளில் 30 வருடங்களுக்கு மேலாக இடம் பெற்ற கொடிய இன அழிப்பு நிகழ்வு முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 10 ஆண்டுகள் முழுமையாக நிறைவுற்றிருக்கின்ற நிலையிலும் இப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலைகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதனை ஆராய்வதற்கும் கடந்த 10 வருட காலங்களில் இவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள், வழங்கப்பட முடியாமல் போன உதவிகள் மற்றும் இவர்களின் வாழ்வாதார நிலைகளை எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்திற்கு உயர்த்த முடியாமல் போனமைக்கான காரணங்கள் பற்றியும் ஒரு தெளிந்த முடிவை எட்டுவதற்காகவே இந்த மாநாடு என்றார்கள்.

இவ்வாறான சுயமதிப்பீடு ஒன்றினை மேற் கொண்ட பின்னர் இவ் அறிக்கையின் ஊடாக மேற்கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் இனி வரும் காலங்களில் வழங்கப்பட இருக்கின்ற உதவிகள் அனைத்தையும் ஓர் ஒழுங்குபடுத் தப்பட்ட பொறிமுறை வழியாக வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்த முறையான ஒரு திட்டத்தை வகுக்க முடியும் என்றார்கள். தரவுகள் சரியென்றால் இவ்வாறன திட்டங்களை வகுத்து நடைமுறைப் படுத்தமுடியும். சரியான தகவல்களை, முறையான தரவுகளைப் பெறுவதே உங்களின் மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நடந்தவற்றை மூடி மறைக்க தரவுகள் சரிபடுத்தப்பட்டுள்ளமையை மனதிற் கொள்ளுங்கள்.

எவ்வாறு ஒரு பிரச்சினை என்று வந்தவுடன் முஸ்ஸிம் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு செயலாற்ற முன்வந்துள்ளார்களோ அதேபோல் போர்க்கால அட்டூ ழியங்களை மறைக்க சிங்கள அரசியல்வாதிகளும் அலுவலர்களும் போட்டி போட்டுக் காண்டு ஒற்றுமையாகச் செயற்பட ஆயத்தமாக உள்ளார்கள் என்பதையும் நீங்கள் கணக்கில் எடுக்க வேண்டும். எம்முள் சிலர் தமது பிரத்தியேக நன்மைக்காக பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு 'ஆமாம் போடத் தயங்காது வாழ்ந்து வருகின்றார்கள். உங்கள் பயணத்தின் போது நீங்கள் சந்திக்கக்கூடிய எதிர்மறை நிலைகளுள் இதுவும் ஒன்று.

நான் முதலமைச்சராக கடமையாற்றிய

> மாகாண சபையால் ஒரு சதமும் திருப்பி அனுப்பவில்லை. பிரதேச செயலர்களும் மத்தியின்அரச அலுவலர்களுமே திருப்பி அனுப்பியவர்கள்

கடந்த 5 வருடங்களில் மாற்றுத் திறனாளிகள் மீதும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்தியிருந்தோம். இவர்க ளுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவி கள் வெறுமனே பண உதவிகளாக மேற்கொள்வதானால் அவற்றால் பலன் எதுவுமில்லை என்பதனை உணர்ந்து கொண்டோம் நாம் வழங்குகின்ற உதவிகள் அனைத்தும் அவர்களின் அப்போதைய உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வனவாக அமைந்திருந்திருக்கலாம். ஆனால் அவை ஒரு நிரந்தரத் தீர்வாக அமைவதற்கு சாத்தியக் கூறுகள் மிக அரிதாகவே காணப்பட்டன.

நாம் வழங்குகின்ற உதவிகள் அவர்களுக்கு ஒரு நிரந்தர தீர்வாக அமைகின்ற போதே அவர்களின் வாழ்வாதார நிலைகள் உயர்த்தப்படலாம். அந்த வகையிலேயே எமது திட்டங்கள் அனைத்தும் அமைந்திருந்த போதும் வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் அளவுகள் அவ்வாறான பெரிய திட்டங்களை நிறைவேற்ற போதுமானதாக அமையவில்லை. எனினும் எமக்கு கிடைக்கப்பெற்ற சொற்ப நிதிகளில் இருந்து முடிந்த வரை உதவிகளை மேற்கொண்டிருந்தோம்.

ஒவ்வொரு வருடமும் முதலமைச்சரின் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 10 வீடுகள் வரை நிர்மாணித்து வழங்கியிருக்கின்றோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு முன்னு ரிமை கொடுத்து வந்தோம். அது போன்று பாதிக்கப்பட்டவர்கள் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக பல்வேறு உதவி களை வழங்கி வந்தோம்.

உதாரணமாக விவசாய முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களுக்கு விவசாய உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் போன்ற பொருள்களையும் தையல் முயற்சியில் ஈடுபடக்கூடிய பெண்களுக்கு தையல் இயந்திரம் அதனோடு இணைந்த உபகரணங்கள் ஆகியவற்றையும் வழங்கி வந்திருந்தோம். அதே போன்று வர்த்தக முயற்சியில் ஈடுபடக் கூடியவர்களுக்கு வர்த்தக தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய உபகரணங் கள், இலத்திரனியல் நிறுவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கி வந்திருந்தோம். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகியவற்றுக்கான உதவிகளையும் முடிந்தளவு வழங்கி வந்திருந்தோம்.

ஜனாதிபதி தொடக்கம் பிரதமர் மற்றும் உயர் அதிகாரிகள் வரை அனைவரிடமும் இவர்களின் தேவைகள் பற்றியும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் குறித்தும் எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

இவை அனைத்துக் கும் மேலாக வெளிநாட்டு உயர் ஸ்தானிகர்களை சந்திக்கக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போதெல்லாம் இவர்களின் தேவைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்ட உறுப்பி'னர்களுக்கென தனியான ஓர் அலகை சுகாதார அமைச்சின் ஊடாக நிறுவி அதனூடாக அவர்க ளுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றின் தற்போதைய நிலை பற்றி எனக்குத் தெரியாது.

வீடமைப்பு உதவிகள் போன்ற வெளிநாட்டு உதவித்திட்டங்கள் கிடைக்கப்பெற்ற போதும் அவற்றை மக்களுக்கு வழங்குவதில் எமது அரச அதிகாரிகள் காட்டிய மெத்தனப் போக்கு விசனத்திற்குரியது. போரின் போது ஓர் இடத்தில் நிரந்தரமாகக் குடியிருந்தவர்களை அரச படைகள் அவர்களின் வீடு வாசல்களை உடைத்தெறிந்து அவர்களை இடம் பெயர் செய்துவிட்டு பின்னர் மீள்குடியமர்வின் போது குடும்பத்தில் ஒருவருக்கு வீடில்லை, இரு உறுப்பினர்களுக்கு வீடில்லை, அரச உத்தியோகத்தர்களுக்கு வீடில்லை என தாமாகவே சட்டங்களை வகுத்து செயற்பட்டது மாத்திரமன்றி வழங்கப்படட் வீடமைப்பு உதவித் திட்டங்களில் அரைவாசிக்கு மேல் மீளத்திருப்பி அனுப்பப் பட்டதையும் நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இவை மாகாண சபையால் திருப்பி அனுப்பப்படவில்லை. நாங்கள் ஒருசதத்தையேனும் என்றுமே திருப்பி அனுப்பிவிடவில்லை. ஆனால் பிரதேசசெயலாளர்களும் மத்தியின் அலுவலர்களுமே இவ்வாறு திருப்பி அனுப்பி உள்ளனர். பாதிக்கப்படட் மக்களின் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது என்பது இடைத்தரகர்களின் கமிஷன் பணத்தில் தங்கியிருக்கின்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது தான் எமது மக்களின் இன்றைய நிலை.

எமது மக்களின் வாழ்வாதார நிலைகளை மேலுயர்த்துவதற்கு எமது மக்களால் மட்டுமே முடியும். நாங்களாக முன்வந்து எம் மக்கள் நலம் காக்க வேண்டும். அதற்கான ஆணிவேராக இவ்வாறான சுய மதிப்பீட்டுத் திட்டங்கள் உதவக் கூடியன என்ற எதிர்பார்ப்புடன் உங்கள் முயற்சிகள் சிறப்பாக கைகூட வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

> “ வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் அளவுகள் அவ்வாறான பெரிய திட்டங்களை நிறைவேற்ற போதுமா னதாக அமையவில்லை. எனினும் எமக்கு கிடைக்கப்பெற்ற சொற்ப நிதிகளில் இருந்து முடிந்த வரை உதவிகளை மேற்கொண்டிருந்தோம்.”

## விளையாட்டுக்கள் மகிழ்வின் வெளிப்பாடாக உள்ளன

பனிச்சறுக்கு கலைஞர்களின் அனைத்துலகக் கழகம் அவ்விளையாட்டின் அழகை அனுபவிக்கும்படி மக்களை ஊக்குவிப்பதை தங்கள் நோக்கமாகக் கொண்டிருப்பது குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். அனைத்து விளையாட்டுக்களும் மகிழ்வின் காரணமாகவும் அம்மகிழ்வின் வெளிப்பாடாகவும் உள்ளன என்ற நிலையில் பனிச்சறுக்கு விளையாட்டும் சுதந்திர இயக்கத்திற்கும் ஒன்றிணைந்து பயிற்சி பெறுவதற்கும் உதவுகின்றது எனக் கூறினார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## வறியோர் உலக நாளுக்கு திருத்தந்தையின் செய்தி

இவ்வாண்டு நவம்பர் 17 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் வறியோர் உலக நாளுக்குரிய செய்தியை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் இன்றைய உலகில் அநாதைகள், வீடற்றோர், புலம்பெயர்ந்தோர் என்று அடிமைத்த னத்தின் பல்வேறு வடிவங்களில் வாடும் மனிதர்கள் உள்ளனர். வறுமை என்ற நிலையில் பிறந்தவர்களை அது அவர்கள் இழைத்த குற்றம் என்ற கண்ணோட்டத்தில் இவ்வுலகம் காண்கிறது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான

# கொச்சிக்கடை அந்தோனியார் யாத்திரைத் தலம் கொழும்பு பேராயரால் புதனன்று திறந்து வைப்பு




ஏப்ரல் 21 தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேசிய யாத்திரைத் தலம் கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு 12 ஜூன் 2019 அன்று கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் மல்கம் கருதினால் றஞ்சித் ஆண்டகையால் ஆசீர்வதித்து திறக்கப்பட்டது.





13 ஜூன் 2019 அன்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மல்கம் கருதினால் றஞ்சித் ஆண்டகையுடன் துணை ஆயர்கள் மற்றும் குருக்கள் இணைந்து திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய யாத்திரைத்தலம் என மிக விமரிசையாக கொண்டாப்படும் மேற்படி புனித அந்தோனியார் தேசிய யாத்திரைத்தல பெருவிழா உயிர்ப்பு தினத்தன்று நடந்த சோக சம்பவத்தின் பின்னர் நவநாட்கள் எதுவும் நடத்தப்படாமல் மிக அமைதியாக திருநாள் திருப்பலி மட்டும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இறந்தவர்களின் பெயர்ப் பலகையும் ஆலயத்தில் பொருத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலில் சேதமடைந்த கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் விஸ்தரிப்புக்காக துறை முக அதிகார சபை 06 பேர்ச் காணியை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் விசேட வேண்டுகோளின் பேரில் பிரதமர் அலுவலக பிரதானியும் துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சருமான சாகல ரத்னாயக்க துறை முக அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் கையளித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# பொறுமையும், கூடிய சக்தியும் இருந்தாலே நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்பலாம்

### ஜேர்மன் – இலங்கை சமூக சமாதான பணியாளர் போசானா



கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் 'சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் முக்கியத்துவம்' பற்றிய கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ்.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் யாழ் மாவட்ட இளையோருக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் 12.06.2019 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக ஜேர்மன்–இலங்கை சமாதானப் பணிகளின் இணைப்பாளரான போசனா அவர்களும் வளவாளராக ஈ.சொவ்ட் நிறு வன மனிதவள முகாமையாளரான செ.அரவிந்தன் தேவராஜனும் இக் கருத்தமர்வில் கலந்து கொண்ட கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் இளையோரை நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய இயக்குநர் எஸ்.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார்; 'சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் முன்னெடுப்பதற்கு இளையோர் பங்களிப்பு முக்கியமானது. அவர்கள் ஆற்றல் திறன்களை வளப்படுத்தி கிராமங்களில் மேற்கொள்ளும் சர்வமத ஒன்றிணைவு மூலம் இளைஞர்கள் முன்னெடுக்கும் ஒவ்வொரு செயல்களும் அவர்கள் சமாதான தூதுவர்களாகச் செயற்படுவதற்கு தூண்டு கோலாக அமைகின்றன. அதற்கான ஊக்கப்படுத்தல் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்' எனக் கூறினார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய போசானா அவர்கள் 'ஆயுதத்தால் சமா தானத்தின் அமைதியை ஏற்படுத்துவது சமாதானமாகாது. மக்கள் உறவை பலப்படுத்துவதில் ஒவ்வொருவரும் தன் வீட்டிலும், சூழலிலும், நாட்டிலும் ஏற்பட வேண்டுமானால் எமது நாடு, எமது சமூகம், எமது குடும்பம் என்ற பற்றுறுதி கொள்ளும் போதுதான் சமாதானம் நிலைக்கும். இதற்கு எமது நாட்டின் சிறுவர்கள், இளையோர், முதியோர்கள் ஒன்றிணைந்து சமாதானத்தை வளர்க்க முன்வர வேண்டும்.

எமது நாட்டில் மட்டும் சமாதா னத்துக்கான போர்கள் நடைபெறவில்லை. எல்லா நாடுகளிலும் நடைபெற்றே வருகின்றன. சமாதானம் என்பது இலேசான காரியமில்லை. மிகுந்த பொறுமையும், கூடிய சக்தியும் இருக்க வேண்டும். சமாதானத்தை ஒருநொடிப் பொழுதில் அழித்து விடலாம். அதனைக் கட்டியெழுப்புவதென்பது மிகவும் கடினமானது. அதைக் கட்டியெழுப்ப பல காலம் தேவைப்படும். அதை சலிக்காமால் முன்னெடுத்து செல்வதில் இளையோர் ஒன்றிணைந்து முன்நின்று உழைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளுக்கு என்றும் எமது பங்களிப்புகள் அனுசரணையாக இருக்கும்.– என்றார்.

மேலும் வளவாளரால் இளையோர்களுக்கான திறன் வெளிப்படுத்தல் செயற்பாட்டின் மூலம் சமாதானத்தை தங்கள் பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான வழிகாட்டல், மற்றும் இளையோர்களின் இன்றைய நாள் அனுபவப்பகிர்வுகளுடன் இந்நிகழ்வு இனிது நிறைவடைந்தது.

# உலகில் மத நம்பிக்கைக்காக மக்கள் கொடுமைப்படுத்தப்படும் போக்கு வளர்ந்து வருகிறது

### திருப்பீட உயர் அதிகாரி ஐ.நாவில் உரை

ஒவ்வொருவரும் தங்கள் சுதந்திர மான எண்ணங்களையும், மனசாட்சியையும், மதத்தையும் பின்பற்றும் உரிமைகளை மனித உரிமைகள் அறிக்கை உறுதி செய்துள்ள போதிலும் மத நம்பிக்கைக்காக மக்கள் கொடுமைப்படுத்தப்படும் போக்கு உலகில் வளர்ந்து வருகிறது என திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் ஐ.நா. அவையில் உரையாற்றினார்.

நியூயோர்க்நகரில்அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் கூட்டங்களில்திருப்பீடத்தின் பிரதிநிதியாகப் பங்கேற்கும் பேராயர் பெர்னார்தித்தோ அவுசா அவர்கள்மதவழிபாட்டுத்தலங்களைக் காக்கும் திட்டங்கள் என்றதலைப்பில் 11ஜூன் 2019 அன்றுநடைபெற்றகூட்டத்தில் தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

மனித உரிமைகள் அறிக்கை உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவுற்றிருந்த போதிலும், இவ்வுரிமைகளில் ஒன்றான மத உரிமை இன்னும்இவ்வுலகில்முழுமையாக உறுதி செய்யப்படாமல் இருப்பது வேதனைதரு கிறது என்று பேராயர் அவுசா அவர்கள் கவலை வெளியிட்டார்.

அண்மைய சில மாதங்களில் இலங்கை, புர்கினா பாசோ, நியூசிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய இடங்களில் மத வழிபாட்டு நேரங்களில் நிகழ்ந்த தாக்குதல்கள், மத நம்பிக்கை கொண்ட அனைவர் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாக உள்ளனஎன்றுபேராயர் அவுசா அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார். ஐக்கிய அமீரகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட வேளையில் அவரும் இஸ்லாமிய அல்–அசார் தலைமை குரு Ahmed Al-Tayyeb அவர்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் மத வழிபாட்டுத் தலங் களுக்கு முழுமையான பாது காப்புதரு வது ஒவ்வொரு நாட்டின்அரசுக்கும்முன்உள்ள முக்கிய கடமை என்றுகூறப்பட்டுள்ளதை பேராயர் அவுசா அவர்கள் தன் உரையில் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

வழிபாட்டு தலங்களின் பாதுகாப்பு என்று குறிப்பிடும்போது, அது, வெறும் கட்டடங்களின் பாதுகாப்பை மட்டும் குறிப்பதல்ல மாறாக, மத நம்பிக்கை கொண்ட குழுமத்தையும் கட்டியெழுப்புவதாகும் என்று தன் உரையில் குறிப்பிட்ட பேராயர் அவுசா அவர்கள் மதங்களைப் பற்றிய சரியான கல்வி வழங்குவதன் வழியே இந்தப் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும் என்று எடுத்துரைத்தார்.



# மரண படுக்கையில் கடைசி ஆசைகள்...!

மரணம், பிறக்கும் போதே ஊர்ஜிதமாகும் முதல் விஷயம். ஒருவர் பிறக்கும் போதே என்ன ஆவார், எந்த நிலைக்கு செல்வார், எவ்வளவு சம்பாதிப்பார், எத்தனை திருமணங்கள் செய்வார், பிள்ளைகள் எண்ணிக்கை, பிரபலமாவாரா, தோல்வி அடைவாரா என்று எதையும் கூற முடியாது.

ஆனால், ஒன்றே ஒன்றை மட்டும் அடித்துக் கூறலாம். நிச்சயம் ஒரு நாள் மரணிக்க தான் போகிறார். நிச்சயமான மரணத்தை தோளில் ஏந்திக் கொண்டு தான் நாம் வாழ்நாள் முழுக்க வாழ்ந்து வருகிறோம். மரணம் எப்போது நிகழும் என்று யாராலும் கூறிவிட முடியாது.

ஒருநாள் திருமணமான சில நிமிடத்தில் புது மணப்பெண் திடீரென மயங்கி விழுந்து இறந்துவிட்டார். திருமண விழா பூண்டிருந்தது வீடே, சோகமயமானது. ஆனால், சில சமயங்களில் மரணம் நம் கண்முன்னே நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்.

எப்போது நம்மை அழைத்து செல்லும் என்றே தெரியாது. அந்த மரண படுக்கை காலமானது மிகவும் கொடுமையானது. இப்படியாக மரண படுக்கையில் இருக்கும் நோயாளிகள் வெளிப்படுத்தும் ஆசைகள் குறித்து மருத்துவர்கள் கூறியவற்றை இந்த தொகுப்பில் காணலாம்.

**துக்கம்!**

துக்கம் பெரும்பாலும் ஏதேனும் நோய் காரணமாக நீண்ட காலமாக முடியாமல் இருக்கும் நபர்கள் எப்போது மரணம் தங்களை அழைத்துச் செல்லும் என்ற எண்ணத்தோடு தான் இருப்பார்கள். ஆனால், மரணம் அவர்களை நெருங்கப் போகிறது என்ற சூழல் வரும் வேளையில் இன்னும் ஒரு நாள் வாழ வாய்ப்பு கிடைக்குமா என்ற எண்ணம் தான் நாள்தோறும் அவர்கள் மனதில் எழும்.

மதில் பூனை என்பது போல வலி தாங்கவும் முடி யாமல், பிரியமானவர்களை பிரியவும் முடியாமல் துக்கத்தில் இருப்பார்கள்.



**உண்மைகள்!**

தங்கள் வாழ்வில் செய்த பெரும் தவறுகள், அதுநாள் வரை மறைத்து வைத்திருந்த உண்மைகள், நண்பர்கள், உறவினர்கள் சார்ந்து அவர்கள் வைத்திருந்த அபிப்பிராயம், மற்றவர் பற்றி அவர்கள் பரப்பி இருந்த பொய்யான தகவல்கள் பற்றி எல்லாம் கூட வெளிப்படையாகக் கூறிவிடுவார்கள்.

இறக்கும் போதாவது மனதில் ரணம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று கருதுவார்கள். பெரும்பாலும் இறக்கும் போது அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் முற்றிலும் உண்மையானதாகவும், மிகுந்த மதிப்புள்ளதாகவும் இருக்கும்.

**ஆன்மீகம்!**

சிலர் மிகுந்த ஆன்மீகத்தில் ஆழ்ந்திருப்பார்கள். கடவுள் தன்னை சொர்க்கத்திற்கு அழைத்துக் கொள்வார், தனது குடும்பத்தாரை நன்கு பார்த்துக் கொள்வார் என்று வேண்டுவார்கள். தியானம் செய்வார்கள், யாரிடமும் பேசாமல் நெடுநேரம் அமைதியாக இருப்பார்கள். ஆனால், இப்படியானவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அதிகபட்சம் பலரும் தனக்கு இருக்கும் அந்த கடைசி நேரத்தில் முடிந்த வரை தனது உறவுகளுடன் பேசிட வேண்டும் என்றே நினைப்பார்கள்.

**இச்சை!**

இச்சை! என் வாழ்வில் இப்படி ஒரே ஒரு நபரை தான் கண்டுள்ளேன். அவரது புகை பழக்கம் காரணத்தால் தொண்டைப் பகுதியில் புற்று உண்டாகி இருந்தது. கண்டறிந்தபோது புற்று நான்காம் நிலையில் இருந்த காரணத்தால், அவரது குரல்வளையும் இழக்கும் நிலை உண்டானது. அவருக்கு குரல்வளையும் நீக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட தனது மரண படுக்கையில் போராடிக் கொண்டிருந்தார்.

அறுவை சிகிச்சைக்கு ஓரிரு நாள்களுக்கு முன், ஒரு பெண்ணுடன் இரவை கழிக்க வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தினார். இப்படியான ஆசைகள் வெளிப்படும் நபர்களும் இருக்கிறார்கள். சிலர் கடைசியாக ஒருமுறை புகைக்க விரும்புவார்கள், சிலர் மது அருந்த விரும்புவார்கள். ஆனால், இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

**தண்ணீர்!**

இன்னும் சில நேரத்தில் அவர் மரணித்து விடுவார் என்று நாங்கள் மட்டுமே அறிவோம் என்று நினைத்திருந்தோம். ஆனால், அவர் எங்களை அழைத்து மரணிக்கும் முன் நான் கொஞ்சம் நீர் அருந்திக் கொள்ளலாமா என்று கேட்டார். கடைசி பல நாள்களாக அவர் நீர், உணவு இன்றி மருந்துகள் மூலமாகவே வாழ்ந்து வந்தார்.

அவரது அந்த ஒரு கிளாஸ் நீர் என்ற விருப்பமானது எங்களை திகைக்க வைத்தது. மனம் வருந்த வைத்தது. அவரை காப்பற்ற முடியவில்லையே என்ற வருத்தம் மட்டும் பல நாள்கள் தொண்டைக் குழியில் வருத்தமாக ஸ்தம்பித்து நின்றது.

**தன் படுக்கையில்...**

மரண படுக்கையில் இருந்தது என் அம்மா... நீண்ட நாள்களாக உடல்நல குறைப்பாடு காரணமாக மருத்துவமனையில் வைத்து பார்த்து வந்தேன். அவர் இறந்துவிடுவார் என்று முடிவாகிவிட்டது. எங்கள் முக வாட்டத்தை வைத்து அவரும் அதை அறிந்துக் கொண்டார்.

நான் இறந்துவிடுவேன் என்பது உறுதியாகிவிட்டால், தயவு செய்து என்னை வீட்டுக்கு அழைத்து சென்றுவிடு. நான் எனது படுக்கையில் மரணிக்கவே விரும்புகிறேன் என்று கேட்டுக் கொண்டார். அவர் விருப்பத்தின் படியே வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். வீட்டுக்கு அழைத்துச் சென்ற மூன்றாவது நாளில் அம்மா இறந்துவிட்டார்.

**விருப்பமானவை!**

சிலர் தங்களுக்கு விருப்பமான உடை, நகை, கைக்கடிகாரம் போன்றவற்றை கடைசியாக ஒருமுறை அணிந்து பார்த்துக் கொள்ள விருப்பம் தெரிவிப்பார்கள். புதியதாக எதுவும் கேட்க மாட்டார்கள். நெடுங்காலமாக அவர்கள் மனதுக்கு மிக நெருக்கமானவையாக அவை இருக்கும். குழந்தை போல அதை வாங்கி மாட்டிக் கொண்டு கண்ணாடி முன் தன்னைத் தானே அவர்கள் அழகு பார்த்துக் கொள்ளும் போது, சிலமுறை கண்களில் நீர் நம்மை அறியாமல் வந்துவிடும்.

**நல்லது!**

இவர்களை எல்லாம் பார்க்கும் போது மனதில் ஒரே ஓர் எண்ணம் தான் எழும், முடிந்த வரை நல்லது செய்வோம், நல்லவராக வாழ்வோம், நல்லதே நினைப்போம், கடவுளிடம் அனைவருக்கும் நல்ல வாழ்க்கை மற்றும் எண்ணத்தை அளிக்க வேண்டுவோம். இங்கே எதுவும் நிலையானது அல்ல. மரணிக்கும் போது நாம் சுமந்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆசையும் பெரும் சுமையாக இருக்கும். அவற்றை சுமக்கவும் முடியாது, வேண்டாம் என்று இறக்கி வைக்கவும் முடியாது. ★

# அறிவூட்டும்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேறு பல நாடுகளில், பிற நாள்களில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவை பொறுத்தமட்டில், ஜூன் மாதம் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமையே (இன்று) 'தந்தையர் தினம்' கொண்டாடப்படுகிறது.

கனிவான கண்டிப்பையும், மறை முகமான பாசத்தையும் வெளிப்படுத்தும் தங்களது தந்தையைக் கௌரவித்து பரிசுகளை வழங்க, பிள்ளைகள் தயாராகி வருகின்றனர்.

இன்றைய பரபரப்பான உலகில், குடும்பத்தின் வளர்ச்சிக்காக உழைக்க ஓடிக்கொண்டிருக்கும் தந்தைமார்களில் எத்தனையோ பேர், குடும்பத்தைப் பிரிந்து வெளிநாடுகளில் உழைத்து கொண்டிருக்கின்றனர். பெரு நகரங்களில் குடும்பத்துடன் இருந்தாலும், காலையில் குழந்தை கண்விழிக்கும் போது வீட்டை விட்டு வேலைக்கு புறப்படும் தந்தைமார்கள், இரவு குழந்தை தூங்கும் நேரத்தில் தான் வீடு திரும்புகிறார்கள். அந்த அளவுக்கு குழந்தைகளுடனான உறவை வேலைப் பளு பிரிக்கிறது.

இதுபோன்ற சூழ்நிலையில், வீட்டில் இருக்கும் தனது சிறு வயது குழந்தைகளுக்கு பொம்மை வாங்கிக்கொடுத்து விளையாடச் சொல்லிவிட்டு பல தந்தைமார்கள் வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால், அந்த குழந்தையோ, பொம்மைக்கு பதிலாக தனது தந்தையே, அருகில் இருந்து விளையாட மாட்டாரா? என்று ஏங்குகிறார்கள். பொருளாதார தேவை அந்த அளவுக்கு குடும்ப சூழ்நிலையை மாற்றிவிடுகிறது. இருந்தாலும், தந்தை மீதான பாசம் அந்த குழந்தைகளுக்கு குறைந்து போய் விடுவதில்லை.

சிறு வயதில், தாய்-தந்தையின் கை விரலைப் பிடித்து தத்தித்தத்தி நடக்க பழகும் குழந்தைகள், தங்களது பெற்றோரின் முதுமைக் காலத்தில், அவர்களின் நடை தளரும்போது, கையைப் பிடித்து நடக்க உதவுவதுதான், தாய்-தந்தைக்கு அவர்கள் ஆற்றும் கடமையாக இருக்க முடியும். அதற்கான உறுதியை இன்றைய தந்தையர் தினத்தில் அனைவரும் ஏற்போம். ★

# இரவில் வெந்நீர் குடிப்பது நல்லதா?

வெந்நீர் உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் அதிகபடியான நன்மைகளை செய்யக்கூடியது. ஆனால் இரவு நேரத்தில் வெந்நீர் குடித்தால் உடலுக்கு நல்லதா? என்பது குறித்து அறிந்து கொள்ளலாம்.

காலை நேரத்தில் வெந்நீர் குடிப்பது உடலுக்கு மிகவும் நல்லது. நம்மில் பலரும் இதனை பின்பற்றிக் கொண்டு இருப்பார்கள். வெந்நீர் உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் அதிகபடியான நன்மைகளை செய்யக்கூடியது. ஆனால் இரவு நேரத்தில் வெந்நீர் குடித்தால் உடலுக்கு நல்லதா? என்ற கேள்வி பலருக்கும் இருக்கும்.

ஆம். உண்மையில் ஆரோக்கியத்திற்கும் நம் அழகிற்கும் இரவு நேரத்தில் வெந்நீர் குடிப்பது அவசியம். சிலர் தூங்கும் முன் தண்ணீர் குடித்தால், சிறுநீர் உபாதைகள் ஏற்பட்டு, தூக்கம் கெட்டுவிடும் என்றே தண்ணீர் குடிப்பதை தவிர்த்திடுவார்கள். குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இரவு படுக்கும் முன் வெந்நீர் குடித்தால் தூக்கம் சிறப்பாக இருக்கும். மேலும் வெந்நீர் அருந்துவதால் உண்டாகும் நன்மைகளை பார்ப்போம்.

வெந்நீர் அருந்துவதால், உடலின் உள்ளே வெப்பம் உற்பத்தியாகி, வியர்வையாக வெளியேறும். இதனால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியாகி, இரத்த ஓட்டம் சீராக இருக்கும்.

நம் உடலுக்கு நீர் என்பது மிகவும் முக்கிய தேவையாக இருக்கிறது. ஏனென்றால், வியர்வை, சிறுநீர் போன்றவற்றால் உடலில் நீர் இழப்பு ஏற்பட்டு கொண்டுதான் இருக்கிறது. இதனை சமன் செய்ய தொடர்ச்சியாக நீர் அருந்துவது கட்டாயம். இரவு நேரத்தில் வெந்நீர் குடித்துவிட்டு படுப்பதால் உடலில் நீர் தேவை பூர்த்தியாகிறது.

சாப்பிட்டு முடித்தபின் வெந்நீர் அருந்துவதால் செரிமானம் எளிதாக இருக்கும். கடினமான உணவுகள் கூட எளிதில் ஜீரணமாகக் கூடிய திறன் வெந்நீருக்கு உண்டு. இரவு நேரத்தில் செரிமானம் என்பது சற்றே தாமதமாக இருக்கும். வெந்நீர் குடுப்பதால் அந்தப் பிரச்சினை இருக்காது.

வெந்நீர் அருந்துவதால் உணவுகள் எளிதில் ஜீரணமாகின்றன. உணவு எளிதில் உடைத்து சத்துக்கள் உடலுக்கு கிடைக்கச் செய்கிறது. இதனால் உடல் எடையும் குறைகிறது. காலையும் இரவும் வெந்நீர் குடிப்பது மிகவும் நல்லது. ஆரோக்கியமாக வாழ இதனை பின்பற்றுவோம். ★

# இலங்கையின் குற்றச்சாட்டை மறுத்த ஐ.சி.சி.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கு மட்டும் சர்வதேச கிரிக்கெட் சபை அநீதி இழைப்பதாக இலங்கை அணியின் முகாமையாளரும், சிரேஷ்ட தேர்வாளருமான அசந்த டி மெல் முன்வைத்திருந்த குற்றச்சாட்டை, ஐ.சி.சி. முற்றாக மறுத்துள்ளது.

அசந்த டி மெல் முன்வைத்த குற்றச்சாட்டில், 'நாங்கள் விளையாடிய நான்கு போட்டிக்கான ஆடுகளங்களும் புற்கள் நிறைந்து காணப்பட்டன. ஐ.சி.சி. எங்களுக்காக புற்கள் நிறைந்த ஆடுகளத்தைத் தயார் செய்துள்ளது. நான்கு போட்டிகளில் விளையாடியதில் இருந்து நாங்கள் இதை தெரிந்து கொண்டோம்.

அதே மைதானத்தில் மற்ற அணிகள் மோதும் ஆடுகளங்கள் புற்கள் காய்ந்து, துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமான வகையில் தயார் செய்யப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிக்கான ஆடுகளங்கள் புற்கள் நிறைந்ததாக உள்ளன. இதுபற்றி நாங்கள் புகார் அளிக்கிறோம். ஐ.சி.சி. நடத்தும் தொடரில் ஒரு குறிப்பிட்ட அணிக்கெதிராக மட்டும் ஒரு குறிப்பிட்ட ஆடுகளமும், மற்ற அணிகளுக்கு வேறுவிதமான ஆடுகளங்களும்தயார்செய்தது நியாயமானது அல்ல.

கார்டிப் போட்டிக்கான பயிற்சியின்போது மூன்று வலைகளுக்குப்பதிலாக இரண்டுவலைகள் மட்டுமே தயார் செய்து தந்தனர். நாங்கள் தங்கிய விடுதியில் நீச்சல் குளம் இல்லை. வேகப்பந்து வீச்சாளர்கள் ரிலாக்ஸ் ஆக நீச்சல் குளம் ஒவ்வொரு அணிகளுக்கும் தேவை' என கூறியிருந்தார்.

ஆனால், இந்த முறைப்பாட்டில் உண்மை இல்லை என மறுத்துள்ள ஐ.சி.சி., இதுகுறித்து தெளிவுப்படுத்தி அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'நாங்கள் சுயாதீனமாகச் செயற்படும் ஒரு ஆடுகள ஆலோசனை உத்தியோகத்தரைப் போட்டிகளை நடத்தும் மைதானங்களில் உள்ள ஆடுகளப் பராமரிப்பாளருடன் இணைந்து வேலை செய்வதற்காக ஐ.சி.சியின் எல்லா நிகழ்ச்சிகளிலும் எடுத்திருக்கின்றோம். அதன்படி, ஆண்களுக்கான 2019ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத்திலும் எந்த மாற்றங்களும் கிடையாது.

இதுவரையில் இங்கிலாந்து நிலைமைகளுக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட ஆடுகளங்கள் குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது உள்ளத்தில், பத்து அணிகளும் சமமாக நடத்தப்படுகின்றன' என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இறுதி போட்டிக்குள் நுழைந்தது மயிலங்காடு ஞானமுருகன் அணி



யாழ் லீக் அனுமதியுடன் பாடும் மீன் கழக அனுசரணையுடன் குருநகர் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின்நினைவாக நடத்தும் தூய ஒளி கிண்ணச் சுற்றுப்போட்டியில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

# 8 விக்கெட்டுகளால் இங்கிலாந்து வெற்றி!



மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரின் 19ஆவது போட்டியில் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

சௌத்தம்ரனிலுள்ள தி ரோஸ் பவுல் மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி இங்கிலாந்தின் பந்துவீச்சுக்குத்தடுமாறியநிலையில் அவ்வணி, 44.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்திய அணி சார்பாக, நிக்கோலஸ் பூரன் 63 ஓட்டங்களையும், ஷிம்ரோன் ஹெற்மயர் 39 ஓட்டங்களையும், கிரிஸ் கெயில் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், ஜொப்ரா ஆர்சர் மற்றும் மார்க் வூட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, ஜொய் ரூட் 2 விக்கெட்டுகளையும், கிரிஸ் வோக்ஸ், லியம் ப்ளங்கெற் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் 213 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, ஜொய் ரூட்டின் சதத்தின் உதவியுடன் வெற்றியைச் சுவீகரித்தது.

அவ்வகையில், இங்கிலாந்து அணி 33.1 ஓவர்கள் நிறைவில், 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அணி சார்பாக ஜொய் ரூட் 11 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 100 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அத்துடன், ஜொனி பைர் ரோவ் 45 ஓட்டங்களையும், கிரிஸ் வோக்ஸ் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக, ஷனன் கப்ரியல் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் சிறப்பாக விளையாடிய ஜொய் ரூட் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வெற்றியுடன் இங்கிலாந்து அணி, இந்த உலகக் கிண்ணத் தொடரில் தான் விளையாடிய 4 போட்டிகளில் மூன்றில் வெற்றிபெற்று 6 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. மேற்கிந்திய தீவுகள் அணி நான்கு போட்டிகளில் ஒன்றில் வெற்றிபெற்றதுடன், கைவிடப்பட்ட போட்டியின் ஒரு புள்ளியுடன் 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## இன்றைய ஆட்டம்

இந்தியா - பாகிஸ்தான்

பிற்பகல் 3 மணி



# தவானுக்கு பதிலாக யாருக்கு வாய்ப்பு?

உபாதைக்குள்ளாகியுள்ள இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவானுக்கு பதிலாக, விஜய் சங்கர், தினேஷ் கார்த்திக் ஆகியோரில் ஒருவரை போட்டியின் சூழ்நிலைக்கு ஏற்ப களமிறக்கி விளையாட உள்ளதாக அணியின்தலைவர்விராட்கோஹ்லி தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியில், துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது ஷிகர் தவானின் பெருவிரலை, குல்டல் நைல் வீசிய பந்து தாக்கியது.

இதனால் அவருக்கு விரல் முறிவு ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு 2 முதல் 3 வார காலம் ஓய்வில் இருக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு பதிலாக இளம் விக்கெட் காப்பாளரான ரிஷப் பந்த் அணிக்கு உள்வாங்கப்பட்ட போதும், யார் பதினொருவர் கொண்ட அணியில் விளையாடுவார் என்பதில் சந்தேகம் இருந்தது.

இதற்குதற்போதுவிராட்கோஹ்லி பதிலளித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'ஷிகர்தவானை பொறுத்தவரை கை விரலில் அவருக்கு ஏற்பட்டுள்ள காயம் மிகவும்விரைவாககுணம்அடைந்து வருகிறது. தவான் ஒரு மிக சிறந்த துடுப்பாட்ட வீரர். தான் எப்படியாவது உலகக் கிண்ண தொடரில் மீண்டும் பங்கேற்று விளையாட வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் அதிகப்படியாக உள்ளது. அத்தகைய எண்ணங்கள் தவான் காயத்திலிருந்து விரைவாக மீண்டு வர உதவிகரமாக அமையும்.

மேலும், லீக் போட்டிகளில் மாற்று வீரர்களாக விஜய் சங்கர், தினேஷ் கார்த்திக் ஆகியோரில் ஒருவரை போட்டியின் சூழ்நிலைக்கு ஏற்ப களமிறக்கி விளையாட உள்ளோம். ஆனால் அரையிறுதி போட்டிகளுக்கு முன்னதாக நிச்சயம் தவான் முழு உடல் தகுதி பெற்று விடுவார் என நம்புகிறோம். ஆகையால் தவானுக்கு பதிலாக உலகக் கிண்ண தொடரில் முழுவதற்குமான மாற்று வீரர் யாரையும் தேர்வு செய்யவில்லை' எனக் கூறினார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி, இன்று பரம எதிரியான பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# நியூசிலாந்து அணியுடன் விளையாடாதது நல்லதே



உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் விளையாடதது நல்லது என்று இந்திய அணியின் தலைவர் கோஹ்லி கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கிண்ணத் தொடரில் திடீரென்று மழை பெய்து வருவதால் முக்கியமான ஆட்டங்கள் அதன் காரணமாகக் கைவிடப்பட்டு, இரு அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்தியா – நியூசிலாந்து அணிகள் மோதிய ஆட்டத்திலும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைபட்டது.

இது குறித்து இந்திய அணியின் தலைவர் கோஹ்லி கூறுகையில், அவுட்பீல்ட் விளையாடுவதற்கு ஏற்ற வகையில் இல்லாத நிலையில் போட்டியை கைவிட்டிருப்பது சாதுர்யமான முடிவு.

எப்போதும் வீரர்களின் பாதுகாப்பு முக்கியம். இல்லாவிட்டால் வீரர்களுக்கு காயம் தான் ஏற்படும். இரு அணிகளும் இதுவரை ஆடிய அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற நிலையில், புள்ளியை பகிர்ந்து கொள்வது மோசமானது அல்ல.

அடுத்து நாங்கள் பாகிஸ்தான் அணியை ஞாயிற்றுக்கிழமை சந்திக்க உள்ளோம். அப்போது எத்தகைய மனநிலையுடன் இருப்போம் என்பதை அறிவோம்.

இந்த ஆட்டத்தை மையமாக வைத்து உணர்வுபூர்வமான ஒரு சூழல் நிலவுவதால், முதல்முறையாக உலக கோப்பையில் ஆடும் வீரர்களுக்கு நெருக்கடி உருவாகலாம். ஆனால் களத்திற்கு வந்து விட்டால் எல்லாமே அமைதியாகி விடும் என்று கூறியுள்ளார்.

## ஹிஸ்புல்லாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினால், எட்டு மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்றுக்காலை 9.45 மணிக்கு, பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையான அவர், நேற்று மாலை 5.30 மணியளவிலேயே விசாரணை முடிந்து அங்கிருந்து வெளியேறினார்.

அவரிடம் சுமார் 8 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு மறுநாள் 22ஆம் திகதி, இரவு 10 மணியளவில், ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்த போது பாசிக்குடாவில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இரண்டு அரேபியர்களைச் சந்தேகத்துக்குரிய வகையில் சந்தித்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாகவே ஹிஸ்புல்லாவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வரவழைக்கப்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அதேவேளை தனது கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் வரை அமைச்சரவையைக் கூட்டப்போவதில்லை என அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்கிழமை அமைச்சரவை கூட்டப்படவில்லை. அமைச்சரவை கூட்டப்படாமைக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் அதிருப்தி வெளியிடப்பட்ட நிலையிலேயே அமைச்சர் சஜித் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 42 மற்றும் 43 ஆம் அத்தியாயத்தின் கீழ் ஜனாதிபதிக்கு உள்ள பொறுப்பின் அடிப்படையில் ஜனாதிபதி அமைச்சரவையைக் கூட்ட வேண்டும் என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கத் தீர்மானித்திருந்தது. அரசமைப்பின் 42 ஆம் அத்தியாயத்தில் நிறைவேற்றதிகாரம் மற்றும் அமைச்சரவை தொடர்பில் ஜனாதிபதிக்கு உள்ள பொறுப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்கேற்ப அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது.

அரசமைப்பிற்கிணங்க தற்போது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற சட்ட ரீதியான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பு கூற வேண்டும். நிறைவேற்றதிகாரத்தின் கீழ் அமைச்சரவையின் பொறுப்பு தொடர்பான 43 (1) அத்தியாயத்தில் இந்த விடயம் உள்ளடங்குகின்றது.

அரசை நடத்தும் பொறுப்பு அமைச்சரவைக்குரியது. அதே போன்று நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறவேண்டிய கடமையும் அமைச்சரவைக்கு உண்டு. ஜனாதிபதி அமைச்சரவையின் உறுப்பினர், அமைச்சரவையின் பிரதானி என்று அரசமைப்பின் 42 (2) ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பிற்கிணங்க அமைச்சரவையைக் கூட்டும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு என்பதை அமைச்சரவை ஜனாதிபதிக்கு வலியுறுத்தவிருந்த நிலையில், மீண்டும் அமைச்சரவையைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தமையால் அதற்கான அவசியம் இல்லாமல் போனதாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டு வீடு ஒன்றுக்கு கடந்த புதனன்று அடிக்கல் நாட்டிய பின்னர் ஊடகவியலாளரிடம் பேசிய போதே சு.சரவணபவன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

“பிரதமர் மோடியின் (இலங்கை விஜயத்தின்) நான்கு மணித்தியாலங்களும், அவர் சந்தித்த மாதிரிகளையும் பார்த்தால் அதன் உண்மையான நோக்கங்கள் என்ன வென்பது வெளிவரவில்லை.

அங்கு, ரணில் விக்கிரமசிங்க அவரை வரவேற்கின்றார். பின்னர் அவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கின்றார்.

இவர்களுக்கு எல்லாம் நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆனால், இங்கு புரையோடிப் போய்க் கிடக்கும் பிரச்சினை தமிழர் பிரச்சினை.

இந்தப் பிரச்சினையைத் தொடக்கி வைத்து, பின்னர் தீர்வைக் காண்பதாகச் சொன்னது இந்தியா. எனவே, பொதுவான ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் (கையாளப்பட வேண்டிய) அதிமுக்கியமான விவகாரம் இந்த இனப்பிரச்சினை. ஆனால், இதனை ஒரு சிறிதளவேனும் அவர் தனது கருத்தில் எடுத்தார் என எமக்குப் படவில்லை.

இந்தியா எங்கள் பிரச்சினைகளை முகம் கொடுக்கும், பார்க்கும் என்று பார்த்தால், அவர்களுடைய அணுகுமுறை எங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை.

இப்போது, அங்கு டெல்லிக்கு வரும்படி அவர் (பிரதமர் மோடி) கூறுகின்றார். எத்தனை முறை டெல்லிக்குப் போய் விட்டார்கள்?

இவர், இது இரண்டாவது முறை பிரதமராக வந்திருக்கின்றார். மூன்றாவது முறை வந்தாலென்ன, நான்காவது முறை வந்தாலென்ன எங்கள் பிரச்சினையைத் தட்டிக் கழித்துக் கொண்டுதான் போவார்.

அவர்களுடைய அடிப்படை நோக்கம் இலங்கை தற்போது ஒரு முக்கிய கேந்திர நிலையமாக வந்துவிட்டது, அங்கு சீனாவின் ஆதிக்கம் கூடிவிட்டது, அது மாத்திரமல்ல, விசாரணைக்கு என்ற போர்வையில் அமெரிக்காவும் அங்கே வரவிருக்கின்றதோ, வந்துவிட்டதோ அது சரியாகத் தெரியவில்லை, எனவே இவற்றை எல்லாம் கருத்தில் எடுத்துத்தானும் இங்கே கவனம் செலுத்துகின்றேன் என்பதை இலங்கைப் பெரும்பான்மை இனத்துக்கு ஒரு செய்தியாகக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார் என்றுதான் நம்புகிறேன். - என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் கரு ஜயசூரிய உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

வவுனியாவுக்கு நேற்றுக் காலை 9 மணியளவில் விஜயம் மேற்கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ போதிதக்சினாராமய பௌத்த விகாரைக்கு சென்று விகாராதிபதி சியம்பலாகஸ்வெவ விமல சாரநாயக்க தேரரின் ஆசிகளைப் பெற்றமையுடன் வவுனியாவில் தற்போதைய நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் ஈரட்டை பெரியகுளத்தில் அமைந்துள்ள டீ.யு.லீ நினைவு நூலகம் மற்றும் மஹாகருணா பள்ளியைத் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத் திறப்பு விழாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாச மற்றும் சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த வெளிநாட்டவர்கள், பௌத்த விகாரதிபதிகள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## கோட்டாவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து வேட்பாளரைக் களமிறக்குவதா அல்லது தனித்தனியாக வேட்பாளர்களைக் களமிறக்குவதா என்பதுகூட இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. அதற்கிடையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்று எப்படிக் கூற முடியும்?

- இப்படிக் கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்தக் கட்சியும் இன்னமும் தீர்மானிக்கவே இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி கூட இறுதி முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலையே பலர் விரும்புகின்றார்கள் எனவும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்பது உறுதியான விடயம் எனப் பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். எனவே, மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இவ்விருவரினதும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலவான பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த அரசு கடந்த 4 வருடங்களாக பௌத்த தர்மத்துக்கு எதிரான செயற்பாடுகளையே மேற்கொண்டிருந்தது.

பௌத்தத்தை அழிக்கும் நோக்கிலேயே பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருபாலினத் திருமணத்தைச் சட்டமாக்க வேண்டும் உள்ளிட்ட பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவையனைத்தும் அரசில் உள்ளவர்களின் கொள்கைகளாகும். சர்வதேசம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்கவே அரசு செயற்பட்டு வருகின்றது.

மதமொன்றே தேவையில்லை என்ற நோக்கத்தில்தான் அரசில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களால்தான் அன்று நாம் தோற்கடிக்கப்பட்டோம்.

தற்போது ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை இதில் உள்ள உறுப்பினர்களுக்கு அதிகாரம் உள்ளதா என்பது சந்தேகமாகும். இவ்வாறு பல குறைப்பாடுகள் உள்ளன - என்றார். (ஐ)

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை என்று புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனது பெயரை வெளியிட விரும்பாத அந்த அதிகாரி, உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார் என்று தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் உள்ளூர் குழுவினால் மாத்திரமே, திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது என்பதை விசாரணையாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தற்கொலைக் குண்டுதாரிகளின் காணொளி ஐ.எஸ். அமைப்புக்கு, இந்தோனேசியா வழியாகவே அனுப்பப்பட்டுள்ளது. அதனையே அவர்கள் ஊடகங்களுக்கு வெளியிட்டனர்.

ஐ.எஸ். தலைவர் அல் - பக்தாதி இலங்கைத் தாக்குதல்களுக்கு பின்னர் உரிமை கோரியிருந்தார்.

தாக்குதலில் ஈடுபட்ட உள்ளூர் குழு, அல் - பக்தாதியின் தலைமையில் செயற்பட்டிருக்கவில்லை. எனினும் ஐ.எஸ். அமைப்பின் உறுப்பினர்கள் சிலருடன் அவர்கள் சில வழிகளில் தொடர்பு கொண்டிருக்கலாம்.

தாக்குதல் நடத்தியவர்கள் தூய ஐஎஸ் அமைப்பு உறுப்பினர்கள் அல்ல என்றும் அந்தப் புலனாய்வு அதிகாரி தெரிவித்துள்ளார்.

தேவாலயங்கள் மற்றும் விடுதிகளை இலக்கு வைத்து நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை தேசிய தௌஹீத் ஜமாத் என்ற உள்ளூர் பயங்கரவாத அமைப்பே மேற்கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதன் தலைவராக இருந்த சஹ்ரான் ஹாசிமும், தற்கொலைக் குண்டுதாரிகளில் ஒருவராகச் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட அவர் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அவர் தெரிவிக்கையில் -

அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் சின்னப்பிள்ளைகளை போன்று சண்டையிட்டுக் கொள்கின்றனர். கலாசாரம் - இயற்கை சூழல் என்பவற்றைப் பாதுகாக்கும் தலைவர்களே தேவை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எனக்கும் அழைப்புக்கள் வருகின்றன. அதற்குரிய தகுதியும் திறமையும் என்னிடமுண்டு. ஆனாலும் அந்த சேற்றில் இறங்க நான் தயாரில்லை - என்றார். (ஐ)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகேஷ் சேனநாயக்க எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார். அவர் ஏற்கனவே சேவை நீடிப்பிலேயே உள்ளார். அவருக்கு மற்றுமொரு சேவை நீடிப்பு வழங்கப்படாவிடின் அவர் ஓய்வு பெறுவது நிச்சயம்.

எனினும் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு அவருக்கு மற்றுமொரு சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக நம்பகமாக அறிய முடிகிறது.

இதேவேளை இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவுக்கு பின்னால் இரண்டு அதிகாரிகள் இராணுவத் தளபதி பதவிக்கா கப் பனிப்போரில் ஈடுபட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவராகத் தற்போதைய தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளார். எனினும் ஜனாதிபதி அவருக்குச் சேவை நீடிப்பு வழங்கினாலேயே அவர் அடுத்த இராணுவத் தளபதியாக வரமுடியும். ஏனெனில் அவர் எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

இருப்பினும் சவேந்திர சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்கி இராணுவத் தளபதியாக்கவும் தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை முப்படைத் தளபதியாக நியமிக்கவும் ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய முப்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணவர்த்தனவுக்கு இராஜதந்திரப் பதவியொன்றை வழங்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் தற்போதைய இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவுக் குச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டால் அடுத்த நிலையிலுள்ள மற்றொரு அதிகாரியான மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே தனது 55 ஆவது வயதில் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி ஓய்வுபெறவேண்டியிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் ஐக்கிய தேசியக் கட்சிதான் வெற்றிபெறும். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று இப்போதைக்கு அறிவிக்கமாட்டோம்.

- இவ்வாறு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்பது உறுதியான விடயம் எனத் தெரிவித்திருந்த பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எவரைக் களமிறக்கினாலும் படுதோல்வியடையும் எனவும் கூறியிருந்தார்.

இது தொடர்பில் கேட்டபோதே அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

ராஜபக்ஷ குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சிக்கு நாட்டு மக்கள் இடமளிக்க மாட்டார்கள். நாட்டின் நலனையும் மூவின மக்களினது ஒற்றுமையையும் விரும்புகின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் நாட்டு மக்கள் வாக்களிக்கத் தயாராக இருக்கின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரிஸ்.

முன்னதாகச் செய்தியாளர்களிடம் பேசிய ஹலீம் எம்.பி., அமைச்சுப் பதவிகளை ஏற்பது சம்பந்தமாக எதிர்வரும் 18 ஆம் திகதி நடத்தப்படும் கூட்டத்தில் ஆராயப்படுமெனக் கூறியிருந்தார். அதே சமயம் இராஜினாமா செய்தவர்கள் அடுத்த வாரம் பதவியேற்பார்கள் என்றும் செய்திகள் வெளிவந்திருந்தன. இந்நிலையில் அது தொடர்பில் கேட்டபோதே ஹாரிஸ் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மீண்டும் பதவிகளை நாங்கள் ஏற்பது என்ற பேச்சுக்கு இப்போதைக்கு இடமில்லை. சமூகம் மீதான நெருக்கடிகள் குறைந்தபாடில்லை. எனவே அவற்றைப் பார்க்காமல் அமைச்சுப் பதவிகளை மீண்டும் பெறுவதைப் பற்றி நாங்கள் யோசிக்கவில்லை. ஹலீம் எம்.பி சொல்லும் கூட்டம் எங்கு நடக்கும் என்பது பற்றி தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை அமைச்சுப் பதவிகளை இப்போது பெறுவதை விட எமது மக்கள் மீதான அடக்குமுறைகுறித்துச் சிந்தித்து அவற்றை நிறுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும். யாருக்கு எப்படியோ எனக்குப் பதவி முக்கியமல்ல. என் சமூகமே எனக்கு முக்கியம். நான் சமூகத்துடன் இருக்க விரும்புகிறேன் - என்றார். (ஐ)

# திருவிழாவில் தங்கச் சங்கிலி அறுத்த 6 பெண்கள் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 16

பெண் ஒருவரின் தங்க சங்கிலியைத் திருடிய 6 பெண்களைக் கைது செய்துள்ளனர் என நாவலப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி கடுங்கஞ்சேன நகரத்தின் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிகேம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கும்பாபிஷேகத்திற்கான விசேட பூஜைகள் இடம்பெற் றுக்கொண்டிருந்தவேளை, பக்தர்களின் நெரிசல் அதிகமாகக் காணப்பட்டதை வாய்ப்பாகப் பயன்படுத்தி உட்புகுந்த ஆறு சந்தேகத்திற்கு இடமான பெண்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதைப் போல் நடித்து, வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துள்ளனர்.

இதனை அறிந்த பெண் கூச்சலிட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நாவலப்பிட்டி பொலிஸார் சங்கிலி அறுத்த பெண்ணைக் கைது செய்துள்ளதோடு, அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மொத்தம் 06 பெண் கள் கைது செய்யபட்டுள்ளனர் என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆறு பெண்களும் ஆலயங்களில் இடம்பெறுகின்ற விடே பூஜைகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் இடம்பெறும் பிரதேசங்களுக்கு குழுவாகச் சென்று அடியார்களின் தங்க சங்கிலிகளைக் களவாடும் நடவடிக்கையில் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த ஆறு பெண்களும் வாழைச்சேனை, புத்தளம், ஆலாவத்த, வத்தேகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் 23 தொடக்கம் 28 வரையான வயதையுடையவர்களென்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யபட்ட ஆறு பெண்களையும் நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சர்வதேச நட்புறவைப் பேணுவோம்

## தஜிகிஸ்தான் ஜனாதிபதியிடம் மைத்திரி தெரிவிப்பு

*இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் உலகின் அனைத்து நாடுகளுடனும் நெருங்கிய நட்புறவை பேணுவது தமது நோக்கமாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.*



தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மானுடன் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் பற்றிய 5ஆவது மாநாட்டில் பங்குபற்றுவதற்காக தஜிகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி, துன்பேயில் உள்ள தஜிகிஸ்தான் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று அந்த நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்தார்.

இரு தலைவர்களுக்குமிடையிலான இருதரப்பு பேச்சுக்கள் இடம்பெற்றன. பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளும் அர்ப்பணிப்புடன் உள்ளனஎனவும் முறையான திட்டமொன்றின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.

மேலும் இருநாடுகளுக்கிடையில் முதலீட்டு மற்றும் வியாபார வாய்ப்புகளை கண்டறியும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்று பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் போதை பொருள் கடத்தலை ஒழிப்பது தொடர்பிலும் ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# அரச ஊடகம் ஒன்றை சுவீகரிக்கும் மைத்திரி

*கொழும்பு, ஜூன் 16*

*தற்போது ஊடகத்துறை அமைச்சின் கீழ் உள்ள இலத்திரனியல் ஊடகம் ஒன்றை ஜனாதிபதி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*அண்மையில் அந்த ஊடகம் ஜனாதிபதி தொடர்பாக வெளியிட்ட செய்தி ஒன்று தொடர்பில் அவர் அதிருப்தியில் உள்ளார்.*

*இதற்காக அந்த ஊடகத்தின் பிரதானியை அண்மையில் அழைத்து கடுமையாக எச்சரித்தார் எனவும் கூறப்படுகிறது.*

*இந்தச் செய்தி தொடர்பான விசாரணைக்காக அவர் அந்த ஊடகத்தை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளும் எண்ணத்தில் உள்ளார் எனத் தெரியவருகின்றது. (ஐ)*

# மட்டு. சீயோன் தேவாலயத்துக்கு பேராயர் மல்கம் நேற்று விஜயம்



மட்டக்களப்பு, ஜூன் 16

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அருட்திரு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மட்டக்களப்புக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

மட்டக்களப்புக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை விஜயம் செய்த அவர், ஆயர் இல்லத்துக்குச் சென்று அங்கு மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதலுக்குள்ளான சீயோன் தேவாலயத்துக்கும் விஜயம் செய்த பேராயர், அங்கு புனரமைக்கப்பட்டுவரும் ஆலயத்தைப் பார்வையிட்டார்.

இதன்போது அந்தத் தேவாலயத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனை செய்தார்.

இந்த விஜயத்தின்போது இராணுவ அதிகாரிகள், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# 22 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மன்னாரில் இளைஞன் கைது!



மன்னார், ஜூன் 16

மன்னார், பேசாலை உதயபுரம் பகுதியில் தனது உடைமையில் விற்பனைக்காக வைத்திருந்த ஒரு தொகுதி கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் இருந்து 22 கிலோ 100 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார், பேசாலைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸார் விரைந்து உதயபுரம் பகுதிக்குச் சென்றனர். அங்குள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோது இளைஞர் ஒருவர் தனது உடைமையில் பதுக்கி வைத்திருந்த கேரளக் கஞ்சாப் பொதிகளை கைப்பற்றியதுடன் இளைஞனையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா சுமார் 22 இலட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிய வருகின்றது. (ஐ)

# தவிசாளரின் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படும் பிரதேச சபையின் வாகனம்

## வலி. கிழக்குப் பிரதேச சபை அமர்வில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 16

வலி. கிழக்குப் பிரதேச சபையின் வாகனத்தைத் தனது பிரத்தியேகப் பணிகளுக்குப் பயன்படுத்தியமையை ஏற்றுக்கொண்ட தவிசாளர் தியாகராஜா நிரோஷ், அதற்கான கட்டணத்தைச் சபைக்குச் செலுத்துவதற்குத் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் வாகனத்தைத் தனது பிரத்தியேகப் பணிகளுக்குத் தவிசாளர் பயன்படுத்துகிறார் எனக் குற்றஞ்சாட்டி, சபை அமர்வில் பிரேரணையை முன்மொழிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் , வாதத்தில் பங்கேற்காமல் வெளியேறினார். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் விவாதத்தை முன்னெடுத்துடன், அவர்களது கோரிக்கையை ஏற்கிறார் எனத் தவிசாளர் சபைக்குத் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பிரதேச சபையில் தவிசாளருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தை அவர் தனது துணைவியைச் சாவகச்சேரியில் உள்ள வங்கிக் கிளைக்கு ஏற்றி இறக்குவது உள்ளிட்ட பிரத்தியேகப் பணிகளுக்குப் பயன்படுத்துகிறார் எனக் குற்றஞ்சாட்டி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினர் தவநாயகம் பிரேரணையை முன்மொழிந்தார்.

எனினும் விவாதம் ஆரம்பமாகியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் தவநாயகம் சபையிலிருந்து வெளியேறினார்.

தவிசாளர் உடுப்பிட்டியில் வசிக்கின்றார். அவரது வாக்குரிமையும் வலி. கிழக்குப் பிரதேச எல்லையில் இல்லை. அவர் கொழும்பு மாநகர சபையில் உறுப்பினராக இருந்தவர். ஆனால் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லையில் வசிக்கவில்லை என்று குறிப்பிட்டு தமிழ்த் தேசிய முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி வி.மணிவண்ணனைச் சபை அமர்வில் பங்கேற்பதற்கு நீதிமன்றின் ஊடாக இடைக்காலத் தடையைப் பெற்றுள்ளார் தவிசாளரின் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்.

ஆனால், வலி. கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்காமல் உடுப்பிட்டியில் வசிக்கும் தவிசாளர், சபை எல்லைக்கு வெளியே வாகனத்தில் சென்றுவர அனுமதிக்க முடியாது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சண்முகராஜா சிறிகுமரன் விவாதத்தில் உரையாற்றினார்.

எனினும் அவரது உரையைக் குழப்பும் வகையில் சபையிலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்தனர். அதனால் அவர் தொடர்ந்து உரையாற்ற முடியாது அமர்ந்தார்.

# கபீர் ஹாசிமின் ஆதரவாளர்கள் மாவனல்லையில் போராட்டம்

*கொழும்பு, ஜூன் 16*

*முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு ஆதரவாக மாவனல்லையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.*

*அமைச்சுப் பதவியை ஏற்று மீண்டும் மக்கள் சேவையில் ஈடுபடுமாறு அவரது ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். (ஐ)*



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 16.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.